15வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
☎ 416-282-8059 | 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 | பாலம் 06 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2005


தமிழா நீ பேசுவது தமிழா? 03


நோய்களின் தாய் வீடு கோபம் 08


திருமணத்திற்கான தடைக்கற்கள் 15

# விடுதலைப் புலிகளின் அலுவலகத்திற்கு கைக்குண்டு வீச்சு




தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு அரசியல் துறை அலுவலகத்தின் மீது கை குண்டு வீசப்பட்டது. திங்கள் இரவு 7.25 மணி அளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரே இவ்வாறு கை குண்டை வீசி எறிந்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் நடந்த நேரம் அங்கு சுமார் 15 பேர் தங்கியிருந்த போதும், எவருக்கும் உயிர் இழப்போ, காயங்களோ ஏற்படவில்லை என்று அறியப்படுகின்றது.

புலிகளின் காரியாலயத்திற்கு அண்மையில் பொலிஸ் நிலையம் ஒன்றும், பொலிஸ் சோதனைச் சாவடியொன்றும் இருக்கின்றது. ஆனாலும் இந்த சம்பத்தில் ஈடுபட்டவர்கள் மிக இலகுவாக தப்பிச் செல்வதற்கு முடிந்திருக்கின்றது. எனவே இது இராணுவத்தின் துணையுடன் நடத்தப்பட்ட புலிகளுக்கு எதிரான சதி என புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## வடஅமெரிக்காவில் மிகவும் சிறந்த இடம் வன்கூவர்

*Mercer Human Resource என்னும் நிறுவனம் நடத்திய கணிப்பு ஒன்றின்படி உலகில் உள்ள இடங்களில் நல்ல தரமான வாழ்க்கை முறைக்கு (Quality of Life) மிகவும் சிறந்த இடங்களில் மூன்றாவது இடத்தையும் வட அமெரிக்காவில் முதலாவது இடத்தையும் வன்கூவர் பெற்றுள்ளது.*

*இந்த Mercer Human Resource என்னும் நிறுவனம் உலகம் முழுவதும் உள்ள 41 நாடுகளில் உள்ள 145 நகரங்களில் தனது அலுவலகங்களை கொண்ட ஒரு பாரிய நிறுவனம் ஆகும். இதில் 14ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலை செய்கிறார்கள்.*

*இவர்கள் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் உள்ள 215 நகரங்களில் நல்ல தரமான வாழ்க்கை முறைக்கு ஏற்ற இடங்கள் எவை என்ற கணிப்பை நடத்தினார்கள்.*

*இக்கணிப்பில் 39 விடயங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.*
1. பாடசாலைகளும் அவற்றின் தரமும்.
2. சுகாதார வசதியும் வைத்தியசாலைகளும்
3. பொருளாதார சூழல்
4. அரசியல் நிலவரம்
5. வீடு மற்றும் வீட்டு உபகரணங்கள்
6. பொழுதுபோக்கு அம்சங்கள்
7. அரசசேவையும் பிரயாணவசதியும்
8. அத்திய அவசியமான பொருட்கள்
9. சுற்றுப்புறச் சூழல்

*மேற்கூறியவை இக்கணிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டவற்றுள் சிலவாகும்.*

*இவற்றுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளில் அதிகூடிய புள்ளியாகிய 106.5 பெற்று ஜெனிவாவும் சூரிச்சும் முதலாம் இடத்தைப் பெற்றன. வன்கூவர் 106 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது. இவற்றைவிட கனடாவின் நகரங்களான ரொறன்ரோ 14ஆவது இடம், ஒட்டாவா 20ஆவது இடம், மொன்றியல் 22ஆவது இடம் மற்றும் கல்ஹரி 25ஆவது இடத்தைப் பெற்றன.*

தொடர்ச்சி 05ம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$45.00/ Month
• Up to 700 Min Free
• Evenings & Weekends Free
• 2 Year contract
••• Offer Ends without notice •••
Family plan $40.00/ M/2 phones
•100 Min Daytime to share /Weekend Free
• Upgradable for Free Evening with more Min 2500 Min Free
• between 2 phones V/M, C/W, C/C Free
• Buy one phone as low as $49.99 & 2nd Free
••• 2 year contract
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto
• Home
• R.R.S.P
• Life
• Disability
• Mutual Fund
• Group Insurance
• Child Education
• Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# வருமானவரியைக் குறைத்துக் கட்ட முடியுமா?

**பெரி. முத்துராமன்**

எல்லேருக்கும் பயன் தரும் சில வரி குறிப்புக்களை இப்போதும் அடுத்துவரும் வாரங்களிலும் பார்ப்போம். முதலாவது குழந்தைகள் கவனிப்புச் செலவுகள். இன்றைக்கு கணவனும், மனைவியும் பொருள் ஈட்டுவது என்பது சாதாரண விடயம். அச் சந்தர்ப்பங்களில் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள பெற்றோர் மற்றவர் உதவியை நாட வேண்டியுள்ளது. குழந்தைகள் கவனிப்புக்கு என பொருளும் செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்தச் செலவு உங்கள் வருமான வரியைக் குறைக்கப் பயன்படுகின்றது.

வேலைக்குப் போவது மட்டுமல்லாமல் பெற்றோரில் ஒருவர் வேலைக்கும், மற்றவர் படிக்கவும் செல்லும் சந்தர்ப்பங்களில் கூட இந்தக் குழந்தைகள் கவனிப்புச் செலவை வரியைக்குறைக்கப் பயன்படுத்தலாம். சொந்தத் தொழில் செய்வோருக்கும் கூட இந்தச் செலவு வரியைக் குறைக்க உதவும்.

குழந்தை வயது ஏழுக்கு குறைவாக இருக்குமானால் ஒரு குழந்தைக்கு வருடத்துக்கு $7000 வரை செய்த செலவுகள் வரியைக் குறைக்க அனுமதிக்கப்படுகின்றது. குழந்தைக்கு வயது ஏழிலிருந்து 16க்குள் இருந்தால், $4000 வரை அனுமதிக்கப் படுகின்றது. குறைபாடு உள்ள குழந்தைக்கு (Disabled child) வயது வரம்பு இல்லை. ஆண்டுக்கு $10,000 வரை குழந்தை பராமரிப்புச் செலவாக குறைபாடு உள்ள குழந்தைக்கு அனுமதிக்கப்படுகின்றது. இப் போது மேலும் நுட்பமாக வருமானவரி இந்தச் செலவைப்பற்றி என்ன சொல்கின்றது என்று பார்ப்போம்.



## செய்யும் தொழிலில் வெற்றி பெற

### குழந்தை கவனிப்புச் செலவு என்றால் என்ன?

நீங்களும், உங்கள் வாழ்க்கை துணையும் மற்றவர்களிடம் உங்கள் குழந்தையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி, குழந்தைகளை விட்டு, அதற்கென ஒரு தொகையை அவர்களுக்கு சன்மானமாகக் கொடுத்தலே ஆகும். முன்னர் குறிப்பிட்டபடி அவ்வாறு குழந்தைகளை மற்றவர்களிடம் விடுவதன் மூலமாக, நீங்களோ, உங்கள் வாழ்க்கைத் துணையோ

- வேலைக்குப் போய் பொருள் சம்பாதிக்க முடிந்திருக்கின்றது.
- ஒரு தொழிலைச் செய்ய முடிந்திருக்கின்றது.
- படிப்பதற்கு என பள்ளிக்கோ, கல்லூரிக்கோ பல்கலைக்கழகத்துக்கோ செல்ல முடிந்திருக்கின்றது.

சாதாரணமாக இந்தக் கழிவைக் கோர நீங்கள் பணத்தைக் கனடாவில் வசிப்பவரிடம் கொடுத்திருக்க வேண்டும். குழந்தையும் கனடாவில் உங்களுடன் இருந்திருக்க வேண் டும். 2004இல் இந்தக் குழந்தைகள் கவனிப் புச் செலவைக் கோர குழந்தை வருடத்தில் ஏதேனும் ஒரு பகுதியில் 16வயதுக்குட் பட்டதாக இருந்திருக்க வேண்டும்.

### கணவன், மனைவி இருவரில் யார் இந்தச் செலவைக் கோர வேண்டும்?

யாருக்கு வருமானம் குறைவாக உள்ளதோ அவரே இந்தக் கழிவைக் கோர வேண்டும் என்பது பொதுவிதி. இந்த விதிக்கு விலக்குகளும் உண்டு.

### இந்த வருடம் செய்த குழந்தை கவனிப்பு செலவுக்கு அடுத்த வருடமோ, அல்லது அதற்கு அடுத்த வருடமோ, வரியைக் குறைக்கப் பயன்படுத்தலாமா?

முடியாது, இந்த வருடச் செலவுகளை இந்த வருடத்துக்குத் தான் பயன்படுத்த முடியும்.

### எத்தகையை செலவுகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை?

1. குழந்தை கவனிப்புக்கு என மற்றவர்களிடம் அதற்கென கொடுத்த பணம் (பற்றுச்சீட்டு தேவை)
2. பாலர் பள்ளிகளிலும், குழந்தைகள் காப்பகங்களிலும் கொடுத்தபணம்.
3. பள்ளிகளில் விளையாட்டு, காம்பிங் (Cam ping) என்ற பெயரில் ரசீது கொடுத்திருந்தா லும், முக்கிய நோக்கம், குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளுதலாக இருத்தல்.

குழந்தைகளின் பெற்றோரில் ஒருவர் மற்றவருக்கு குழந்தை கவனிப்புக்கு என பணம் கொடுக்க இயலாது.

மேலும் 18வயதுக்குட்பட்ட உங்கள் உறவினருக்கு (உதாரணம் பெரிய மகனை குழந்தையை பார்த்துக் கொள்ளச் சொல்லல்) கொடுக்கும் பணமும் தகுதி உடையது ஆகாது. யாருக்குப் பணம் கொடுத்தீர்களோ, அவர்களிடமிருந்து ரசீது பெற்றிருக்க வேணடும். அந்த ரசீதில் பணம் பெற்றவரின் சோஷியல் இன்சூரன்ஸ் நம்பர் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

### இறுதியாக தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

- முழுவிபரங்களுடன் ரசீது பெற்றுக் கொள்ள மறவாதீர்.
- மிக அதிகமான கழிவைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இதில் உள்ளது.
- அதேசமயம், அதிகக் கழிவு, உங்களுக்குக் கிடைக்கும் கனடா குழந்தை வரிச் சலுகையையும் (Canada Child Tax Benefit) குறைத்து விடும் என்பதை மறந்து விடக் கூடாது.
- சில சமயங்களில் குழந்தை கவனிப்புச் செலவைக் கோராமல் விடுதல், அதிக கனடா குழந்தை வரிச் சலுகையைப் பெற உதவலாம். திட்டமிட்டுச் செயல்படுங்கள்.

உங்கள் வரித்திட்டமிடல், மற்றும் வரிப் படிவங்களை வருமானவரித் துறைக்குச் சமர்ப்பிக்க தொடர்பு கொள்ளவும் பெரி. முத்துராமன்
Successbizsolution, 416-430-0623






Rick Mercer

**Every Canadian loves a challenge, right?**

**On average, each Canadian produces five tonnes of greenhouse gases a year.** Driving, heating and cooling our homes, using appliances…almost anything we do that uses fossil fuels for energy also creates greenhouse gas (GHG) emissions. And these emissions are causing our climate to change.

**Take the One-Tonne Challenge** – reduce your energy use and your GHG emissions by 20%, or one tonne. You'll save money, and help to protect our climate and our air quality.

**Get your Guide to the One-Tonne Challenge.**
Visit **climatechange.gc.ca** or call
**1 800 O-Canada** (1 800 622-6232), TTY 1 800 465-7735.

**One-Tonne Challenge** **Take action on climate change**

Government of Canada / Gouvernement du Canada

Canada


விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# தமிழா நீ பேசுவது தமிழா?

தமிழ் நாட்டில் எந்த அரசியல் வாதியும், அரசியல் கட்சியும் எது பற்றிப் பேசினாலும், அப்பேச்சின், பிரகடனங்களின் பின்னிருந்து உந்தும் நோக்கங்கள் சற்று நீண்ட கால திட்டங்கள், இப்போதைய பேச்சிலும் பிரகடனங்களிலும் புலப்படாத வேறொன்றாகத் தான் இருக்கும். சாதி ஒழிப்பு, பகுத்தறிவு, வடவர் ஆதிக்கம், பாட்டாளி மக்கள், தன் மானம், இந்தி ஒழிப்பு, தமிழ் பற்றுணர்வு, இப்படியாக, கடந்த 70-80 ஆண்டுகளாகவும் தொடர்ந்து பேசப்பட்டு வந்ததும் வருவதும், எதுவானாலும் சொல்லப்பட்ட தற்குப் பிறிதான முற்றிலும் வேறுபட்ட நோக்கங்களுக்காக முன் வைக்கப் பட்டவையே. இது ஒரு மரபாகி விட்ட ஒன்று. எனவே இன்று பெரிதும் ஆக்ரோசத்துடன் முன் வைக்கப்படும் கோசம், தமிழ் படங்களுக்குப் பெயர் தமிழிலேயே இருக்கவேண்டும் என்று, நேற்று வரை டாக்டர் ஐயா வாக அறியப்பட்ட, இன்று இத்தமிழ்ப் பெயர் போராட்ட அறிவிப்புக் குப் பிறகு, இது பற்றிக் கேள்வி எழுந்ததும் பெயர் மாறிய மருத்துவர் ஐயா, ராமதாஸ் அவர்கள் (இன்னமும் ராமதாஸ் ஏன்? மாலனடிமை என்றல்லவா முழுதுமாக பெயர் மாறியிருக்கவேண்டும் என்று கேட்கப்பட்டது) ஒரு போராட்ட அறிவிப்போடு தமிழ் சினிமா உலகில் ஒரு பெரும் பரபரப்பைக் கிளப்பி உள்ளார். இது வன்முறையைத் தூண்டுமானால் அரசு வாளாவிராது என்று தமிழக முதல்வர் தன்னைச் சந்தித்த திரைப்படத் துறையினருக்கு ஆசுவாசம் அளித்துள்ளார்.

**நான் ரொறன்ரோவிலாகட்டும், இங்கு சென்னையிலாகட்டும், முன்னர் தில்லியிலா கட்டும், எங்கும் ஈழத்திலிருந்து வரும் தமிழர் எவரும் இப்படி பேசக்கேட்டதில்லை. அவர்கள் முழுதும் தமிழில் தான் பேச வேண்டும் என்று சிரமமும் முயற்சியும் எடுத்துக் கொண்டதாக நான் நினைக்கவில்லை. மிக இயல்பாகத்தான் அவர்களுக்கு முழுதும் தமிழிலேயே பேச முடிகிறது.**

இது தமிழ் நாடு. இது தமிழ் சினிமா. படம் எடுப்பது தமிழ் மக்களுக்காக. கதை தமிழ் வாழ்க்கை பற்றி என்று சொல்லப்படுகிறது. மொழியும் தமிழ் என்று சொல்லப்படுகிறது. பின் பெயர் தமிழில் இல்லாது வேறு எப்படி இருக்கமுடியும். இதற்கு ஒரு போராட்டமா? அந்த போராட்டம் பீதியைக் கிளப்ப வேண்டுமா? இதற்கு ஏன் எதிர்ப்பு என்றெல்லாம் நியாயமான கேள்விகள் எழும் தான். ஒரு ஆரோக்கியமான, கலை உணர்வும் அறிவார்த்தமும் கொண்டதாக தமிழ் சமூகமிருப்பின், அதில். இப்படி ஒரு பிரச்சினை எழுகிறதென்றால், ஓர் அரசியல் கட்சியின் போராட்டம் இது வென்றால், இது போன்ற அற்பமும், அர்த்தமில்லாததுமான ஒரு விசயத்தினால், சினிமா உலகம் பீதியும் எதிர்ப்பும் கொள்கிறதென்றால் இந்த சமூகத்தை ஏதோ புரையோடிப்போன நோய் ஒன்று அழித்து வருகிறது என்றுதான் பொருள்.

புள்ளி விவரம் ஒன்று சொல்லப்பட்டது. இந்த போராட்டம் தலையெடுத்த சமயம், சுமார் 80 தமிழ் படங்களுக்கு ஆங்கிலப் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று சொல்லப்பட்டது. ஆக இது ஏதோ ஒன்றிரண்டு பெயர் அல்ல. ஆங்கில பெயர் சூட்டுவது என்பது ஒரு கவர்ச்சியாக, கருதப்படுகிறது, தமிழ் சினிமாவின் வர்த்தக உலகைச் சார்ந்தவர்களிடையே என்பது தெரிகிறது. எந்த மாற்றத்தையும் அதன் வர்த்தக பலாபலன்களை ஆராய்ந்து அதன் லாபகரம் தெரிந்த பிறகே தமிழ் சினிமா ஏற்றுக் கொள்கிறது. அதற்கு ஏதும் சமூக, அறிவார்த்த, கலை சார்ந்த பண்பாட்டு நோக்கிலான புரட்சி கர சிந்தனைகள் உந்துதலாக என்றுமே இருந்ததில்லை. வெற்றியே, அதாவது கொள்ளை




கொள்ளையான வருவாய் தரும் எந்த மாற்றத்தையும் அது சுவீகரிக்கும். அதற்கு, தார்மீக, மனிதாப, பண்பாட்டு சிந்தனைகள் ஏதும் என்றுமே தடையாக இருந்ததில்லை.

பரம ஆஸ்திகரான ஏ.வி. மெய்யப்ப செட்டியாருக்கு நாஸ்திக பிரசாரம் செய்யும் "ஓர் இரவு" படம் தயாரித்து வெளியிடுவதில் ஏதும் தயக்கம் இருந்ததில்லை. அந்தப் படம் பின்னர் ஒரு தமிழ் பட உலகில், தமிழ் அரசியல் உலகில் ஒரு புது திருப்பத்தை, பாதை மாற்றத்தைச் சாதித்திருந்தது. ஆக தமிழ் பட உலகினருக்கு, முதலும் முடிவுமாக இருக்கும் ஒரே சிந்தனை, கொள்ளை கொள்ளையாக பண வருமானத்திற்கு என்ன செய்ய வேண்டி இருந்தாலும் சரி, அதைச் செய்வார்கள். இப்போது தமிழ் நாட்டு மக்களை கவர்ந்துள்ளது, ஆங்கில மோகம். அதாவது பாவனையான, மோகம்தான். ஆத்மார்த்தமான, தீவிர ஆங்கில மோகம் அல்ல. அக்காலத்தில், வின்ஸ்ரன் சேர்ச்சிலின் (Winston Churchill) ஆங்கிலத்திலேயே குறை கண்டவர் என்றும் நடமாடும் ஆங்கில அகராதி என்றும் பெருமைப்படுத்தப்பட்ட வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், வலங்கிமான் என்னும் ஒரு தஞ்சை குக்கிராமத்தில் பிறந்தவர். கொன்வெண்ட்டில் படித்தவர் அல்ல. கம்ப ராமாயண சொற்பொழிவு ஆற்றியவர். 'இன்றிருந்தால்' என்ற அவருடைய தமிழ்க் கட்டுரைகளின் தொகுப்பு, சிருஸ்டிபரமான அவரது தமிழ்க் கையாளலைச் சாட்சிப்படுத்தும். எங்கள் ஊர் என்ற தொகுப்பில் அனேக பெரும் தமிழ்ப் புலவர் பெருமக்களைப் பின் தள்ளி இன்றும் படிக்க ஆர்வத்தைத் தூண்டும், சிருஸ்டிபரமாக மொழியைக் கையாளும் எழுத்து அவரதாக அதில் இருந்தது. அது வேறு விடயம். ஆனால் தமிழ்க் காவலராக தமிழ் இனத்தலைவராக முடிசூட்டப்பட்டுள்ள கழகத்தலைவர் குடும்பத்தின் தொலைக்காட்சி நிறுவனத்தின் பெயர் "சன்' அதன் கிளைகள் KTV, Sun Music, Sun News இதற்கு மாறாக, மத்திய அரசு தொலைக் காட்சி நடத்தும் தமிழ் தொலைக் காட்சியின் பெயர் 'பொதிகை'. கர்னாடகத்தில் அதன் பெயர் "சந்தனா'. ஆந்திராவில் அதன் பெயர் 'சப்தகிரி'. கேரள தொலைக் காட்சி நிறுவனத்தின் பெயர்,'கைராளி'.

கழகத் தலைவருக்கும் அவரது குடும்ப வாரிசுகளுக்குச் சொந்தமான தொலைக்காட்சி, 'சன்' னுக்கும் மிக நெருங்கிய ராதிகாவும் சுப்ரீம் ஸ்டார் என்று (தமிழ்க் காவலர் சூட்டும் பெயரிலேயே எவ்வளவு தமிழ் மணம் கமழ்கிறது!) தலைவரே பட்டம் சூட்டியுள்ள சரத் குமாரும் நடத்தும் தொலைக்காட்சித் தொடர்கள் தயாரிக்கும் நிறுவனத்தின் பெயர் Radaan.

மருத்துவர் அய்யாவின் போராட்டம் பற்றிக் குறிப்பிட்டு அந்த சந்தர்ப்பத்தில் கழகத்தலைவரிடம், இது பற்றிக் கேட்டபோது, அவர் தன் குடும்பத்தின் ஒவ்வொரு பெயருக்கும் பின்னிருக்கும் சரித்திர, கழக, தமிழ்ப் பற்று பற்றி விவரம் தந்தவர், 'சன்', KTV, Sun Music, Sun News பற்றி மூச்சு விடவில்லை. அவரிடம் குறுக்குக் கேள்விகள் கேட்பது என்பது யாருக்கும் சுலபமில்லை. இசைகேடான கேள்விகள் கேட்கப்பட்டால் கேட்பவர் வன்முறையைச் சந்திக்க நேரிடும். ஒரு மூத்த அரசியல் தலைவரிடம் மரியாதையின்றி, பண்பின்று நடந்து கொள்வதாக வசை பாடப்படும். ஒரு மூத்த அரசியல் தலைவரான, அவர், ஒரு நிருபரைப் பார்த்து, இம்மாதிரியான சந்தர்ப்பத்தில், "நான் திருப்பி அடித்தால், யாருமே தாங்க முடியாது தெரியுமில்லே' என்று சொல்ல அந்த பத்திரிகையாளர் சந்திப்பு அத்தோடு முடித்துக் கொள்ளப் பட்டது. கேள்வி கேட்ட நிருபர், பின் தலைவரிடம் சென்று மன்னிப்புக் கேட்கச் சொல்லி, சக பத்திரிகையாளர்களால் வற்புறுத்தி அனுப்பப்பட்டார். விசயம் என்னவென்றால், இது மிக அந்தரங்கம் என புரிந்து கொள்ளப்படும் பொது விசயம். முதலில் உங்கள் கூட்டத் தலைவரின், தமிழுக்காகப் பாடுபட்டு வருபவராகச் சொல்லிக் கொள்பவரின் நிறுவனங்களின் ஆங்கிலப் பெயர்களை மாற்றச் சொல்லுங்கள் என்று யாரும் மருத்துவர் அய்யாவிடம் கேட்கவில்லை. அவரும் இதே ரகம் தான். யாரும் அவரிடம் இப்படிக் கேட்டதில்லை. கேட்டிருந்தால், இம்மாதிரி கேள்விகளுக்கு அவரிடமிருந்து வரக்கூடும் பதில், வேறொரு சந்தர்ப்பத்தில் அவர் கூறிய, 'இன்னொரு தடவை அதைச் சொல், கையை வெட்டி விடுவேன்' என்பதாக இருக்கக் கூடும்.

## வெங்கட் சாமிநாதன்

தொலைக் காட்சி பெயரோடு முடிகிற விசயமில்லை இது. ஒரு வேறு பாடும் இல்லாமல், எந்தத் தமிழ் தொலைக் காட்சியைப் பார்த்தாலும், அதில் தமிழ் பேசக் கேட்பது மிக அரிதாகவே இருக்கும். இது வேண்டுமென்றே செய்யப்படும் ஒன்றல்ல. அப்படித்தான் தமிழர்கள் தமிழ் பேசுகிறார்கள். அவர்கள் வேகமாக வண்டி ஓட்டமாட்டார்கள். அவர்கள் fast- ஆக drive பண்ணுவார்கள். இப்போ நான் ஒரு தொலைக் காட்சியில் கேட்டுக் கொண்டிருப்பது, 'ஒவ்வொருத்தரும் எவ்வளவு oil consume பண்றாங்கன்னு test பண்றதுக்குத்தான் இந்த rally-யை organize பண்யிருக்கோம்.' இதில் எந்த ஆங்கில வார்த்தையும் தமிழில் சொல்லப்படமுடியாத வார்த்தையாக இல்லை. இருப்பினும், தமிழ் நாட்டில் பேசப்படும் தமிழ் இது தான்.

நான் ரொரன்ரோவிலாகட்டும், இங்கு சென்னையிலாகட்டும், முன்னர் தில்லியிலாகட்டும், எங்கும் ஈழத்திலிருந்து வரும் தமிழர் எவரும் இப்படிப் பேசக் கேட்டதில்லை. அவர்கள் முழுதும் தமிழில் தான் பேச வேண்டும் என்று சிரமமும் முயற்சியும் எடுத்துக் கொண்டதாக நான் நினைக்கவில்லை. மிக இயல்பாகத்தான் அவர்களுக்கு முழுதும் தமிழிலேயே பேச முடிகிறது. தமிழ் கிடைக்காத பதங்களுக்கு அவர்கள் தமிழ் தேடும் தேவனேயப் பாவாணர்களாகவில்லை.

ஆனால் எவ்வளவு பாசாங்கில்லாமல் ஈழத்தமிழர்கள் தமிழில் பேசினார்களோ, அவ்வளவு பாசாங்கில்லாது, எவ்வளவு குறைவான தமிழில் தாம் பேசுவது தமிழ்தான் என்ற நினைப்பில் பேசமுடியுமோ அவ்வளவுக்கு சிரமமில்லாமல் ஆங்கிலம் கலந்து பேசுவார்கள் தமிழ் நாட்டில். "இந்த song-க்கு dance பண்றது ரொம்ப difficulty என்று தான் பேட்டி தருபவர் பேசமுடியும். இன்னமும் ஒரு வேடிக்கையும் வேதனையுமான விசயம்: தமிழ் மக்களை அவர்களது விழித்திருக்கும் நேரத்தை திரைப்படங்களும் நடிகர், நடிகைகளும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதற்கு ஈடாக வேறு எதையும் சொல்லமுடியாது. ஒரு வேளை அரசியல் இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கலாம். ஒவ்வொரு வீட்டிலும் குடிசையிலும் கூட இடம் பெற்றிருக்கும் தொலைக் காட்சிப் பெட்டி

**தமிழ் பட உலகினருக்கு, முதலும் முடிவுமாக இருக்கும் ஒரே சிந்தனை, கொள்ளை கொள்ளையாக பட வருமானத்திற்கு என்ன செய்ய வேண்டி இருந்தாலும் சரி, அதைச் செய்வார்கள். பரம ஆஸ்திகரான ஏ.வி. மெய்யப்பச் செட்டியாருக்கு நாஸ்திக பிரசாரம் செய்யும் 'ஓர் இரவு' படம் தயாரித்து வெளியிடுவதில் ஏதும் தயக்கம் இருந்ததில்லை.**

அறைக்குள் நுழைந்து விட்ட திரைப்படம் தான் முதலிடம் என்று சொல்லவேண்டும். (குடிசையில் கழிவறை வசதி இராது. ஆனால் தொலைக்காட்சிப் பெட்டி கட்டாயம் இருக்கும்.) இவ்வளவு வியாபகம் பெற்றுள்ள ஒரு சாதனத்துள், தமிழர்களின் வரலாற்றுத் தொடக்கத்திலிருந்தே இடம் பெற்றுள்ளதாக பெருமைப் பட்டுக் கொள்ளும் ஆடலும் பாடலும், தமிழ் தொலைக்காட்சியில், திரைப்படத்தில், song என்றும் dance என்றும் தான் பேசப்படுகிறதே தவிர பாட்டு, நடனம் என்ற வார்த்தைகளே மறந்து விட்டது என்றே தோன்றுகிறது. அதுபோலத் தான் art உம். கலை என்ற சொல்லும் மறந்து விட்டது.

சென்னைக்கே என்று உருவாகியுள்ள 'மதராஸ் பாசை' கூட, அது ஆங்கிலம் படிக்காத, அதிகம் படிப்பறிவில்லாத மக்கள் பேசும் அந்த கொச்சைக்குக் கூட அதை இனம் காட்டும் வண்ணங்களைக் கொடுப்பது அந்த பாசை கொண்டுள்ள தனி உச்சரிப்போடு பேசப்படும் ஆங்கிலச் சொற்கள் தான். ஆங்கிலத்தின் செல்வாக்கு அவ்வளவு பரவலானது. அது பற்றிய பிரக்ஞையே இல்லாது போகுமளவு ஆழ வேரூன்றியது. 'left- இலே ஓடி, ஓடிச்சியா ஒரு bridge வரும். வந்திச்சா, அப்பாலே, right-இலே போய்க்கினே இரு' இது ஓர்



தொடர்ச்சி 05ம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# நாயின் உணவில் நாற்பது கனியுப்புகள்

## நீண்டகாலம் உயிர் வாழ்வதற்கான இரகசியங்கள் - 6



ரோமானிய சாம்ராஜ்சியத்தின் போர் வீரர்கள், யுத்தத்திற்கு போக முன்னர், இரும்பு வேலை செய்யும் (Black Smith's) கடையின் நீர் தொட்டியில் இருக்கின்ற, அழுக்குத் தண்ணீரை குடிப்பதை வழமையாகக் கொண்டிருந்தனர்.

பழுக்க காச்சிய இரும்பை தணியவைப்பதற்காகவே இந்தத் தொட்டியில் தண்ணீர் வைக்கப்பட்டிருந்தது. இந்த தண்ணீரில் இரும்புச் சத்து (Iron) மிக அதிக அளவில் காணப்படும். பண்டைக்கால விளையாட்டு வீரர்களும், Black Smith's கடையில் உள்ள தண்ணீரைக் குடிப்பதனால் பலன் உண்டு என்று உணர்ந்துள்ளனர்.

**குழந்தைகளுக்கு தாய்ப்பால் மிக முக்கியம். தாய்பாலில் இருந்து, குழந்தை தனக்கு தேவையான இரும்புச் சத்தின் ஐம்பது வீதத்தை பெற்றுக் கொள்ளுகின்றது. அதே சமயம் தாய்பால் கிடைக்காத குழந்தை, infant formula இல் இருந்து 12 வீதத்தை மட்டுமே பெற்றுக் கொள்ள முடிகின்றது.**

ஆம் விஞ்ஞான ரீதியாக நிறுவப்படுவதற்கு, பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே இரும்புச் சத்து (அயன்) மனிதருக்கு முக்கியமானது என்று உணரப்பட்டுள்ளது. மனிதனுக்கு ஒட்டு மொத்தமாக 90 உணவூட்டங்கள் (Nutrition) அத்தியாவசியமாகத் தேவை. அவை அறுபது கனியுப்புகள், 16 உயிர்ச்சத்துகள் (Vitamins), 12 மிக முக்கியமான அமினோ அமிலங்கள், 3 மிக முக்கியமான Faty acid என்று 1991 ம் ஆண்டு நோபல் பரிசுக்கு பிரேரிக்கப்பட்டவரான Nominee, Dr. Joel D Wallach கூறுகின்றார். அத்தோடு அவர் நிறுத்தவில்லை. 'இதனால் பல நூறு நோய்கள் வராமல் தடுக்கப்படும். அத்தோடு, வந்த நோய்களை குணப்படுத்த முடியும்' என்றும் கூறுகின்றார்.

நாயின் உணவில் 40 கனியுப்புக்கள் உள்ளன. எலியின் உணவில் 28 கனியுப்புக்கள் உள்ளன. ஆனால் மனிதனின் உணவில் 11 கனியுப்புக்களே உள்ளன என்று குறிப்பிடும் இவர், பல நோய்களுக்கு காரணம் கனியுப்புகளினதும், உயிர்ச்சத்துக்ளினதும் குறைபாடே என்கின்றார்.

கனியுப்புகளைப் பற்றி இவர் குறிப்பிடுகையில், 'தாவரங்கள் கனியுப்புகளை உருவாக்குவதில்லை. மண்ணில் உள்ள கனியுப்புகளையே தாவரங்கள் உறிஞ்சுகின்றன. இதனால் கனியுப்புகள் காலம் காலமாக மண்ணில் குறைந்து போய் விட்டன. இவ்வாறு தாவரங்கள் மண்ணில் இருந்து உறிஞ்சுகின்ற நைதரசன், பொஸ்பரஸ், பொற்றாசியம் மட்டுமே மறுபடியும் மண்ணை அடைகின்றன'. என்று கூறுகின்றார்.

உலகம் முழுவதுமாக மனிதர்களுக்கு இரும்பு சத்து (கனியுப்பு) குறைபாடுதான் அதிகம் உள்ளது என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது. ஆனால் குறிப்பாக இந்த இரும்புச் சத்து குறைபாட்டால் பெண்களே பாதிக்கப்பட்டுள்ளவர்கள். இருபது வீதமான பெண்களும், தாய்மை அடைந்த பெண்களில் ஐம்பது வீதமானவர்களும், ஆண்களில் மூன்று வீதமானவர்களுமே இரும்புச் சத்து குறைபாடு உடையவர்களாக உள்ளனர்.

அமெரிக்காவில், 19-50 வயதுக்கும் உட்பட்ட நான்கில் மூன்று பெண்கள், தமக்குத் தேவையான இரும்பு சத்தில் எண்பது வீதத்துக்கும் குறைவாகவே உள்ளெடுக்கின்றனர்.

மனிதர்களின் உடலில் இரும்பு சத்து பெரும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளுக்கு காரணமாக உள்ளது. மிக முக்கியமாக, உடலில் உள்ள ஒவ்வொரு கலத்திற்கும் பிராணவாயு (Oxygen) கடத்தப்படுவதற்கு இரும்பு சத்தே பிரதான காரணம்.

எமது செங் குருதியில் உள்ள ஈமோகுளோபின் (Hemoglobin) பிராணவாயு கடத்துகின்ற வேலையைச் செய்கின்றது. ஆனால் இந்த ஈமோகுளோபின் உருவாக்கத்திற்கு அயன் அத்தியாவசியம். உடலில் உள்ள அயனில் மூன்றில் இரண்டு பங்கு குருதியில் உள்ள இந்த ஈமோகுளோபினிலேயே உள்ளது. இரும்பு சத்து இல்லாமல் பிராணவாயு கடத்தல் நடக்கவே முடியாது. இரும்பு சத்து குறைந்தால் நமது உடல் கலங்களுக்கு பிராணவாயு செல்லும் அளவு குறையும். இதனால் உடலில் சோம்பல் ஏற்படும். உடல் நோய் எதிர்ப்பு சக்தி குறையும். இதை விட கலங்களின் வளர்ச்சி, கலங்கள் பிரிவடைதல் என்பவற்றில் குறைபாடு ஏற்படும். புரதம் metabolism க்கும், தோலின் ஆரோக்கியத்திற்கும் அயன் மிக அவசியம்.

அதே நேரம் அளவுக்கு அதிகமான இரும்பு சத்து உடலைப்பாதிக்கும், அது மரணத்தை கூட ஏற்படுத்தும். சிறுவயதினர் 200 mg இரும்பு சத்தை உள்ளெடுத்தால் மரணம் நிகழ்ந்துவிடும். எனவே உங்கள் குழந்தைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் அயன் குளிசைகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்வது மிக அவசியம். தற்செயலாக உங்கள் குழந்தைகள் இரும்பு சத்து குளிசைகளை விழுங்கி விட்டார்கள் என்றால் உடன் அவசர மருத்துவத்திற்காக 911 இலக்கத்தை அழைத்து விடயத்தை கூறுங்கள். அல்லது உடன் அவசர மருத்துவ பிரிவுக்கு குழந்தையுடன் விரையுங்கள்.

பெண்களுக்கு ஏன் இரும்பு சத்து குறைபாடு அதிகமாக ஏற்படுகின்றது என்பதற்கு மிக வலுவான காரணம் உள்ளது.

பெண்களுக்கு இயற்கையாகவே ஏற்படுகின்ற மாதவிடாய் காரணமாக மிகப் பெருமளவு குருதி வெளியேறுகின்றது. இச்சமயத்தில் குருதியில் உள்ள ஈமோகுளோபினுடன் சேர்ந்து இரும்பு சத்தும் வெளியேறி விடுகின்றது. இவ்வாறு வெளியேறும் இரும்பு சத்து ஈடுசெய்யப்படாத காரணத்தால் தான் பெண்களுக்கு இரும்பு சத்து குறைபாடு பெரும்பாலும் ஏற்படுகின்றது.

இவ்வாறு இரும்பு சத்து குறைபாடு உள்ள பெண்கள் தாய்மை அடையும் போது, அவர்களுக்கு பிறக்கின்ற குழந்தைகளும் இரும்பு சத்து குறைபாடு உடையவர்களாகப் பிறக்கின்றது பெருமளவில் நடக்கின்றது.

குழந்தை பிறந்த பின்னரும், இரும்பு சத்து குறைபாடு உடைய தாயின் தாய்ப் பாலை அருந்துகின்ற குழந்தை இரும்பு சத்து குறைப்பாட்டுடனே வளர வேண்டிய நிலைமைக்குள்ளாகின்றது.

தாய்மை அடைந்த பெண்களுக்கு சாதாரணமான பெண்ணை விட இரண்டு மடங்கு இரும்பு சத்து தேவை. இதற்கு ஒரு காரணம், கர்ப்பக்காலத்தில் தாயின் குருதியின் அளவு அதிகரிக்கின்றது. அத்தோடு அந்த தாயின் வயிற்றில் உள்ள சிசுவின் வளர்ச்சிக்கும் இரும்பு சத்து தேவை.

இத்தகைய சூழ்நிலையில் தாய்க்கு இரும்பு சத்து குறைபாடு ஏற்படுமாயின் குறைப்பிரவசம், நிறை குறைவான குழந்தை (Premature deliveries) பிறப்பதற்குரிய சந்தர்ப்பம் உள்ளது. பிறக்கின்ற குழந்தையும் இரும்பு சத்து குறைபாடு உள்ளதாய் இருக்கும்.

இரும்பு சத்து குறைபாடு அனீமியா (Anemia) என்று அழைக்கப்படுகின்றது. அனீமியா ஏற்பட்டால் குருதியில் உள்ள செங்குருதி சிறு துணிக்கைகை வழமையான அளவை விட சிறுத்து விடும். அதனால் கலங்களுக்கு எடுத்துச் செல்லும் பிராண வாயுவின் அளவும் பெருமளவு குறைந்து விடும்.

பன்னிரண்டு பேரில் ஒரு பதின்ம வயது பெண்ணும் (Teenage girl), Reproductive இளம் வயதில் உள்ள பெண்ணும் இரும்பு சத்து குறைபாடு உள்ளவர்களாக உள்ளனர். அத்தோடு பத்து வீதமான குழந்தைகளும் இரும்பு சத்து குறைபாட்டுடன் உள்ளனர்.

சிறுநீரகம் பழுதடைந்து Dialysis முறையால் குருதியை சுத்தம் செய்பவர்களும் இரும்பு சத்தை இழக்கின்றனர். அத்தோடு செங்குருதி சிறுதுணிக்கைகளின் உருவாக்கத்திற்கு காரணமான ஓமோன் Erythropoietin ஐயும் அவர்கள் இழக்கின்றனர்.

இரும்பு சத்து பொதுவாக மாமிசத்தில் அதிகமாக உள்ளது. கோழி ஈரலில் நிறைய உள்ளது. மரக்கறி பிரியர்களுக்கு, cereal (iron fortified), Oatmeal (fortified), சோயா அவரை, பருப்பு, போஞ்சி, கீரை என்பனவற்றில் அயன் அதிகம் உள்ளது.

**செழியன்**

எவ்வளவு அயன் உள்ள உணவை உள்ளெடுத்தாலும், ஒரு நேரத்தில் 10-15 வீத இரும்பு சத்து மட்டுமே குருதித் தொகுதியில் இருந்து உடலுக்குள் உறிஞ்சி எடுக்கப்படும்.

**ஒரு வயதுக்கு குறைந்த குழந்தைகளுக்கு மாட்டுப்பால் கொடுக்கக் கூடாது. இது குழந்தைக்கு Gastrointestinal bleeding ஐ ஏற்படுத்தும்.**

உடலில் இரும்பு சத்து மிகக் குறைந்த அளவு சேமிக்கப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அதிகளவு உறிஞ்சப்படும்.

இரும்பு சத்தில் இரண்டு வகை உள்ளது. ஒன்று Heme இரும்பு சத்துஎன்றும், மற்றது Non Heme அயன் என்றும் அழைக்கப்படும். Heme இரும்பு சத்து உறிஞ்சப்படுவது மற்ற இரும்பு சத்தை விட அதிகம். Heme இரும்பு சத்து 15-35 % குடலில் இருந்து உடலுக்குள் உறிஞ்சி எடுக்கப்படும். இந்த Heme இரும்பு சத்து விலங்குப் பொருட்களிலேயே உள்ளது. சிவப்பான இறைச்சி, மீன், கோழி என்பனவற்றில்

தொடர்ச்சி 05ம் பக்கம்


Point. Click. It's that quick!
Check out the Canada Revenue Agency's Web site
for all the answers to your income tax questions.
cra.gc.ca
Canada Revenue Agency
Agence du revenu du Canada
Canada

# புதிய வீட்டிற்கு புகுமுன்பான சோதிப்புக்கள் (PDI)

*புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு, வீடுகட்டிய நிறுவனத்திடமிருந்து, வாங்கியவர்களுக்கு கையளிக்கு முன்பாக PDI என அழைக்கப்படும் Pre Delivery Inspection செய்வது வழமை. இதற்காக வீட்டை நிர்மாணம் செய்யும் நிறுவனத்தின் பிரதிநிதி வீடுவாங்கியவருடன் சேர்ந்து வீட்டை சோதித்து, அதில் வீட்டை நிர்மாணம் செய்யும் போது தவற விடப்பட்டவை, தவறுதலாக செய்யப்பட்டவை போன்ற பல விடயங்களை குறிப்பிட்ட பத்திரத்தில் நிரப்பப்பட்டு கையொப்பமிட்டு கொடுத்தல் வேண்டும்.*

*இக்குறிப்பிட்ட பத்திரம் நிரப்பப்படும்போது முக்கியமாக கவனித்து, நிரப்பப்பட வேண்டிய சில விடயங்களை கீழே தந்துள்ளேன். கவனத்தில் கொள்க....*

**Exterior Doors**

(1) Warped (2) Dented (3) Sticks (4) Will not close completely
(5) Swings open or closes by itself (6) Crooked in the frame
7) Drags on the floor (8) Does not latch (9) Rubs on the doorjamb
(10) Bind from improperly installed hinges (11) Scratched and/or cracked glass
(12) Weather stripping is not in contact with the perimeter of the door

**Sliding Doors**

(1) Does not roll smoothly (2) Screen will not stay on track (3) Come off tracks

**Garage Door**

(1) Does not operate properly

**Windows**

(1) Screen damaged and/or missing (2) Glass scratched and/or cracked
(3) Doesn't operate properly (4) Crooked and/or warped frame

**Plumbing**

(1) Inadequate water supply (2) Leaking (3) Defective

**Countertop**

(1) Damaged (2) Cracked (3) Chipped (4) Swelled (5) Scratched

**Electrical**

(1) Outlets , switches or fixtures don't work (2) Damaged fixtures

**Furnace & Air Conditioner**

(1) Not installed properly (2) Blocked condensate line
(3) A/C condensing unit is too close to dryer and/or water heater exhaust vent hood.

**Flooring**

(1) Carpet seam is visible (2) Spots or fading on Carpet
(3) Cupped strip hardwood (4) Crowning of strip hardwood
(5) Blistered, bubbled or peeled finish on wood flooring (6) Broken and/or loose tile flooring

**Interior**

(1) Drywall surface blemishes (2) Visible mildew or fungus on interior surfaces
(3) Hammer marks are visible on trims



Expert Building Inspections Limited

905 940 0811 Toll Free 1 866 373 3315 Fax 905 940 6108

www.expertinspector.com

**New Homes - Pre Delivery Inspection**

**Checklist for Possible Deficiencies/Malfunctions**

## நாயின் உணவில் நாற்பது கனியுப்புகள்

04ம் பக்கத்தொடர்ச்சி

உள்ளது.

Non heme இரும்பு சத்து தாவரங்களில் உள்ளது. புரோக்களி, கீரை, பருப்பு, போஞ்சி, மற்றும் செயற்கையாக இரும்பு சத்து சேர்க்கப்பட்ட உணவுப்பொருட்களிலும் இது உள்ளது. இது 2-20 % மட்டுமே குடலில் இருந்து உடலுக்குள் உறிஞ்சி எடுக்கப்படும்.

Non heme இரும்பு சத்து உறிஞ்சப்படுவதை பல காரணிகள் கட்டுப்படுத்துகின்றன.

Non heme இரும்பு சத்துடன் உயிர்ச்சத்து சி யை உள்ளெடுத்தால், இந்த இரும்பு சத்து உள்ளேடுக்கப்படுவது பன்மடங்கு அதிகரிக்கும். அதே சமயம் Non heme இரும்பு சத்துடன் கல்சியம், phytates (Legumes , whole grain இனிலும் உள்ளது) உள்ளெடுக்கப்பட்டால் Non heme இரும்பு சத்து குடலில் இருந்து உறிஞ்சப்படுவது குறைந்து விடும்.

இரும்பு சத்துடன் கோப்பி, தேனீர் அருந்தும் போதும் கூட இரும்பு சத்து அகத்துறிஞ்சல் தடைப்படுகின்றது.

கீரையில் இரும்பு சத்து நிறைய உள்ளது. அதே சமயம் கீரையில் Oxalic acid ம் அதிமாக உள்ளது. இந்த Oxalic acid உடன் இரும்பு சத்து மிக இறுக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. பச்சையாக (சலாட்) கீரையை உண்ணும் போது அந்தக் கீரையில் இருந்து எந்த விதமான அயனும் அகத்துறிஞ்சப்படமாட்டாது.

கீரையை சமைக்கும் போது Oxalic acid க்கும், இரும்பு சத்துக்கும் உள்ள பிணைப்பு உடைக்கப்பட்டு இரும்பு சத்து விடுவிக்கப்படுகின்றது. இந்நிலையில் கீரையை சமைக்கின்ற பாத்திரத்தில் உள்ள நீரில் அதிகளவு இரும்பு சத்து தேங்கி இருக்கும். இந்த நீரை கழிவு என்று வெளியே ஊற்றுகின்ற பழக்கம் நம்மவர்களிடம் அதிகம் உள்ளது. அதனால் கீரையில் உள்ள இரும்பு சத்துவீணாக வீசி எறியப்படுகின்றது.

அடுத்து என்ன வேண்டும் என்பதை தொடர்ந்து பார்க்கலாம்.

• • •

## தரமான வாழ்க்கைக்கு வடஅமெரிக்காவில் மிகவும் சிறந்த இடம் வன்கூவர்

01ம் பக்கத்தொடர்ச்சி



சிவ ஞானநாயகன்

*அமெரிக்க நகரங்கள் எல்லாமே 25உம் அதற்கு பின்னரும் தான் வந்தன. அமெரிக்காவின் நல்ல தரமான வாழ்க்கை முறைக்கு சிறந்த நகரமாக San Francisco வும் Honolulu உம் தெரிவுசெய்யப்பட்ட. அவை உலகில் உள்ள சிறநத இடங்களில் 25ஆம் இடத்திற்கே வந்தன. Houston நகரம் அமெரிக்க நகரங்களின் அதிகூடிய நிலையான 68ஆம் இடத்திற்கு வந்தது.*

*இவற்றில் இறுதி இடத்திற்கு பக்தாத் (Baghdad) நகரம் 14.5 புள்ளிகளை பெற்றுத் தள்ளப்பட்டுள்ளது.*

03ம் பக்கத் தொடர்ச்சி

உதாரணம். இன்னொன்று: 'என்னா மேன், night duty போவணும்னு ஒய்ங்கா தமில்லே சொல்லேன், என்னமோ இரவு கிறவுன்னுகிட்டு'. தமிழ் நாங்கள் அறியாது மறைந்து வருகிறது. அது எங்கள் வாழ்க்கையின் முன்னேற்றமாக, நாகரிகமாக கருதப்படுகிறது. இவை சில உதாரண மாதிரிகள். இவையெல்லாம் வாழ்க்கையில் வெளியிடத்தில். தமிழ் மொழியை கற்காமலேயே ஒரு தமிழ் குழந்தை கல்லூரி வரை பயின்று வெளிவரமுடியும். ஒரு தலைமுறைக் காலமாக தமிழ் நாட்டுக் கல்விக்கூடங்களின் பரிதாப அலை இது. ஒரு கணிசமான எண்ணிக்கையில் இந்த தலைமுறையின் குழந்தைகளுக்கு தமிழ் எழுதப் படிக்கத்தெரியாது. அவசியமில்லை. அவர்கள் கற்று வெளியே வருவது ஆங்கிலமும், தொழில் நுட்பமும்.




வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜீ
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்
Param Gnana
Sales Representative
HomeLife GTA
Realty Inc.
www. themathuram.com
Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)
themathuram.com

# மீண்டும் போர்!போர்! கிரிகெட் போர்!

*இந்தியா VS பாகிஸ்தான் ஒரு கண்ணோட்டம்!*

*மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்திய, பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே யான முதலாவது ரெஸ்ட் போட்டி பஞ்சாபின் மொகாலி நகரில் (மார்ச் 8) ஆம் திகதி தொடங்கியுள்ளது.*

*இரு அணிகளின் தற்போதைய பலத்தைப் பார்க்கும்போது இந்தியாதான் தொடரை வெல்லும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. உள்நாட்டில் புலி என்றழைக்கப்படும் இந்திய அணிக்கு இத்தொடர் சாதகமாக இருக்கும். மேலும் நீண்ட நாட்களுக்கு பிறகு முழு அணி களமிறங்க உள்ளது. காயம் காரணமாக பல போட்டிகளில் விளையாடாமல் இருந்த முன்னணி வீரர்கள் முழு உடல் தகுதி பெற்று இப்போட்டியில் களம் காண உள்ளதும் அணிக்கு பலமாகும்.*

## எஸ். கணேஷ்

*கடைசியாக பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பொழுது பெற்ற தொடர் வெற்றி, இந்திய வீரர்களின் தன்னம்பிக்கைக்கு மேலும் பலமூட்டும் என்பதில் சந்தேகமில்லை. அணியில் உள்ள 14பேரில், யாரை விடுப்பது என்று கடும் குழப்பம் ஏற்படும் அளவுக்கு அணி முழு பலத்துடன் உள்ளது குறிப்பிடத்தக்கது. முழங்கை வலி காரணமாக சில சர்வதேசப் போட்டிகள் மற்றும் உள்ளூர் போட்டிகளில் விளையாடாமல் இருந்த சச்சின் டெண்டுல்கரின் ஆட்டத்தைக் காண இந்திய ரசிகர்கள் மட்டுமல்லாமல், பாகிஸ்தான் ரசிகர்களும் ஆர்வமாக இருக்கிறார்கள். இந்த ரெஸ்ட் தொடரில் தனது சாதனைப் பட்டியலை மேலும் விரிவுபடுத்திக் கொள்ளும் வாய்ப்பில் சச்சின் உள்ளார். தற்போது ரெஸ்ட் போட்டிகளில் 34 சதங்களுடன் இந்திய முன்னாள் அணித்தலைவர் சுநீல் கவாஸ்கரின் சாதனையை சமன் செய்துள்ள சச்சின், மேலும் ஒரு சதமடித்தால், ரெஸ்ட் வரலாற்றில் அதிக சதமடித்த வீரராகத் திகழ்வார்.*

*மேலும் 120 ரெஸ்களில் 9,879 ஓட்டங்களை குவித்துள்ள சச்சின், கனவு எண்ணிக்கையான 10ஆயிரம் ஓட்டங்களைக் குவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை சுநீல் கவாஸ்கர், ஆலன் பார்டர் (அவுஸ்திரேலியா), ஸ்டீவ் வாஹ் (அவுஸ்திரேலியா), பிரையன் லாரா(மேற்கிந்திய தீவுகள்) ஆகியோர் மட்டுமே 10ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளனர்.*

*அதேபோல் காயம் காரணமாக விளையாடாமல் இருந்த வேகப் பந்துவீச்சாளர்கள் பாலாஜி, ஜாகீர் கான் ஆகியோர் திரும்பியுள்ளது நம்பிக்கையூட்டுவதாக உள்ளது. பந்துவீச்சில் பாலாஜி, ஜாகீர்கான், இர்பான் பதான், அனில் கும்ப்ளே, ஹர்பஜன் சிங் ஆகியோர் உள்ளனர். மட்டைவீச்சில், சச்சின் டெண்டுல்கர், ராகுல் திராவிட், வீரேந்திர சேவாக், அணித்தலைவர் சௌரவ் கங்குலி, வி.வி.எஸ். லக்ஸ்மண் என தொடர்ந்து உலகச் சிறந்த மட்டைவீச்சாளர்கள் உள்ளனர். அதேநேரத்தில் பாகிஸ்தான் அணியை சாதாரணமாக நினைத்து விடக்கூடாது என்று வீரர்களை அணித்தலைவர் சௌரவ் கங்குலி எச்சரித்துள்ளார்.*

*பாகிஸ்தான் - அதே நேரத்தில் பாகிஸ்தான் அணியில் பெரும்பான்மையானோர் போதிய அனுபவம் இல்லாமல் உள்ளனர். அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக், துணை அணித்தலைவர் யூசுப் யுஹானா போன்ற ஒரு சிலரே அதிக ரெஸ்றகளில் விளையாடிய அனுபவம் உள்ளனர். காயம் காரணமாக உலகின் அதிவேகப் பந்துவீச்சாளர்களில் ஒருவரான ஷோயப் அக்தர் இல்லாதது அணியின் பந்துவீச்சுத் துறையை பலவீனப் படுத்தியுள்ளது எனலாம். அதேநேரத்தில் 'வெற்றி அல்லது சமன்' என்ற நோக்கத்துடன் விளையாடும்படி வீரர்களுக்கு அணிப் பயிற்சியாளர் பாப் உல்மர் அறிவுறுத்தியுள்ளார். ஷோயப் அக்தர் இல்லா விட்டாலும், முகமது சமி, நாவெத் உல் ஹசன் ரானா, மொகம்மது கலீல் ஆகிய வேகப்பந்து வீச்சாளர்கள் இந்திய வீரர்களுக்கு கடும் சவாலை விடுப்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.*

*ஆடுகளம் - மொகாலி மைதானத்தின் ஆடுகள பொறுப்பாளர் தல்ஜித் சிங், அதிக புல்களும், புதிய மணல்களும் இருக்கும் வகையில் ஆடுகளத்தை அமைத்துள்ளார். ஆனால் மைதானம் எவ்வாறு இருக்கும் என்பதை ஊகிக்க முடியவில்லை. ஆடுகளத்தல் இருந்த களிமண் அகற்றப்பட்டு அதிக அளவு மணல் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போதைய கணிப்பின்படி ஆடுகளம் மட்டைவீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. கடைசியாக 1986-87 இல் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போதுதான் பாகிஸ்தான் அணி ரெஸ்ற் தொடரை வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*அணிவிபரம் -*
*இந்தியா - சௌரவ்கங்குலி (அணித்தலைவர்), ராகுல் திராவிட் (துணை அணித்தலைவர்), வீரேந்திர சேவாக், கௌதம் காம்பிர், சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ். லக்ஸ்மண், யுவராஜ் சிங், தினேஷ் கார்த்திக், ஜாகீர் கான், இர்பான் பதான், ஆஷிஷ் நெஹ்ரா, எல். பாலாஜி, அனில் கும்ப்ளே, ஹர்பஜன் சிங்.*

*பாகிஸ்தான் - இன்சமாம் உல் ஹக் (அணித்தலைவர்), யூனிஸ் கான் (துணை அணித்தலைவர்), தௌபீக் உமர், சல்மான் பட், யாசிர் ஹமீது, யூசுப் யுஹானா, ஆசிம் கமால், சோயப் மாலிக், காம்ரன் அக்மல் (விக்கெட் கீப்பர்), அர்ஷத் கான், டேனிஷ் கனேரியா, ஷாஹித் அஃபரிதி, நவேத் உல் ஹசன், முகமது சமி, முகமது கலீல், அப்துல் ரசாக்.*

### இந்தியாவின் இளம்புயல் சானியாமிர்சா தரவரிசைப் பட்டியலில் 77-வது இடத்திற்கு முன்னேற்றம்




*டுபாய் ஓபன் (Open) ரெனிஸ் காலிறுதியில் பங்கேற்றதன் மூலம் இந்தியாவின் இளம்புயல் சானியாமிர்சா சர்வதேச பெண்கள் தரவரிசைப்பட்டியலில் 77-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இப்போட்டியின் மூலம் அவர் 20இடங்களை தாண்டி 77-வது இடம் பிடித்துள்ளார். அவரது ரென்னிஸ் வாழ்க்கையில் இது ஒரு சாதனையாகும். டுபாய் (Open) ரென்னிஸ் போட்டியில் சானியா தன்னைவிட தரப்பட்டியலில் முன்னணியில் உள்ளவீராங்கனைகளான அமெரிக்க ஓபன் (Open) சாம்பியன் மற்றும் உலக அளவில் 6-ம் இடவீராங்கனைகள் ஆகியோரை தோற்கடித்தர். இதனால் தனது புள்ளிக்கணக்கை 472 க்கு உயர்த்தி உலக தரவரிசைப்பட்டியலில் 77-வது இடம் பெற்றிருக்கிறார். சமீபத்தில் வெளியிடப் பட்ட பெண்கள் தரவரிசைப்பட்டியலில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. 18வயதான சானியா இந்த வார துவக்கத்தில் 97-வது இடத்திலிருந் தார். முதல்சுற்றில் 7-ம் நிலை வீராங்கனை ஜெலீனா கோப்டானிக்கையும், 2-வது சுற்றில் குஜினெட் சோவாவையும் வென்று காலிறுதிக்கு முன்னேறினார். ஆனால் காலிறுதியில் செர்பியவீராங்கனை ஜெலீனா ஜன்கோவிக்கிடம் நேர் செட்டுகளில் தோல்வியடைந்தார். சர்வதேச தரவரிசைப் பட்டியலில் முதல் 4 இடங்களில் மாற்றம் ஏதுமில்லை. லின்ட்சே டேவன்போர்டு, அமெலிமௌரெஸ்மோ, மரியா ஷரபோவா மற்றும் செரீனா வில்லியம்ஸ்.*

### டுபாய் ஓபன் (open) ரென்னிஸ் அமெரிக்க வீராங்கனை டேவன் போர்ட் சாம்பியன்

*டுபாய் Open ரென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் இறுதியில் அமெரிக்க வீராங்கனை லின்ட்சே டேவன் போர்ட் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக வளைகுடா நாடுகளில் ஒன்றான டுபாயில் சர்வதேச அளவிலான Open ரென்னிஸ் போட்டிகள் நடைபெற்று வந்தன. முன்னதாக ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி முடிவடைந்தது. இதில் சுவிற்சலாந்து வீரர் ரோஜர் பெடரர் சாம்பியன் பட்டத்தை வென்றார். அடுத்ததாக பெண்கள் ஒற்றையர் போட்டி நடந்து வந்தது. இதில் முன்னணி வீராங்கனைகளான வீனஸ் வில்லியம்ஸ், செரீனா வில்லியம்ஸ், லிண்ட்சே டேவன் போர்ட், அமெரிக்க Open சாம்பியன் குஜ்னெட்சேவா, இந்திய வீராங்கனை சானியா மிர்சா உள்பட பலர் பங்குபற்றினர். இந்தியாவின் இளம் நட்சத்திர வீராங்கனையான மிர்சா முதல் இரண்டு சுற்றுகளில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறி சாதனை படைத்தார். 2-வது சுற்றில் மிர்சா, அமெரிக்க Open சாம்பியனான ரஷ்ய வீராங்கனை குஜ்னெட்சேவாவை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது. ஆனால் காலிறுதியில் செர்பிய வீராங்கனையான ஜெலினா ஜான்கோவிக்கிடம் தோல்வியடைந்து வெளியே யறினார். மற்றொரு அமெரிக்க முன்னிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் 2-வது சுற்றிலேயே அதிர்ச்சி. அவரது சகோதரியான செரீனா வில்லியமஸ் அரை இறுதியில் தோல்வியடைந்தார். இவர் முன்னதாக அவுஸ்திரேலிய Open பட்டம் வென்றவர்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை இரவு நடந்தது. இதில் பட்டத்தை கைப்பற்ற லிண்ட்சே டேவன் போர்டும், ஜெலீனா ஜான் கோவிக்கும் மோதினர். இந்த இறுதிப்போட்டி சுமார் 2மணி நேரம் நடந்தது பரபரப்பான இந்த இறுதியில் உலக முதல்தர வீராங்கனையான லின்ட்சே டேவன் போர்ட் சாம்பியன் பட்டத்தை வென்றார். அமெரிக்கா வின் முன்னணி வீராங்கனையான டேவன் போர்ட் 6-4, 3-6, 6-4 என்ற செட் கணக்கில் செர்பிய வீராங்கனை ஜெலினா ஜன்கோவிக்கை தோற்கடித்தார். டேவன் போர்ட் இதுவரை 46 பட்டங்களை வென்றிருக்கிறார். ஒரு இலடசம் டொலருக்கும் மேல் பரிசுகளை குவித்திருக்கிறார். ஆனால் ஜன் கோவிக் ஒரு பட்டத்தை மட்டுமே பெற்றிருக்கிறார். கடந்த வருடம் புடா பெஸ்ட் போட்டியின் மூலம் அவர் இந்த பட்டத்தை வென்றார்.*



*ரென்னிஸ் இளம்புயல் சானியா மிர்சா (sania Mirza)*

*பிற்குறிப்பு: இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையில் நடைபெற்ற ரெஸ்ட் போட் டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இந்தியாவின் முதல் இனிஸ் ஆட்டத்திற்கு தாங்கள் சளைத் தவர்களல்ல என்பதை இளம் வீரர்களை உள்ளடக்கிய பாகிஸ்தான் அணி 2ஆவது இனிங்சில் நிரூபித்தது. இதில் தமிழ் நாட்டு கிரிக்கெட்வீரர் பாலாஜி சிறப்பாக பந்து வீசினார். இனிவரும் ஆட்டங்கள் மிகவும் விறு விறுப்பாக அமையும் என்று இரசிர் களிடையே எதிர்பார்ப்பு பலத்துள்ளது. முதல் ரெஸ்ற் பற்றிய விரிவாக்கத்தை அடுத்த இதழில் பார்ப்போம்.*




ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: **416-286-2880**

# யோகா சோதிடம்



- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361



YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE



உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

# நாம் வாழும் அடுக்ககத்தில் (Condo. apartment) தீ பிடித்தால் என்ன செய்யவேண்டும்

1. எம்முடன் இருக்கும் யாவரையும் உடனடியாக வெளியேறும்படி கூற வேண்டும்.
2. எமது Apartment ஐ விட்டு உடனடியாக வெளியேற வேண்டும். சகல அறைகளையும் மூடிவிடவேண்டும். ஆனால் பூட்டக்கூடாது.
3. இயலுமானால் Alarm ஐ சத்தம் போடச் செய்தல் வேண்டும்.
4. 911ஐ கூப்பிடவேண்டும். (911ஐ அழுத்தும் போது, பெயர், விலாசம், மாடி இலக்கம் போன்றவற்றை சரியானதாகக் கொடுத்தல் வேண்டும்.)
5. Elevator ஐ பாவித்தல் கூடாது.
6. Exit கதவுகளால் வெளியேறவேண்டும்.

(குறிப்பு: கதவுகளை திறப்பதற்கு முன்பாக, சாதுவாக தொட்டுப்பார்த்து வெப்ப நிலையை உணரவேண்டும். கதவு, பிடி சூடாக இல்லாவிட்டால் சிறிதாக திறத்தல் வேண்டும். சிறிதாக திறக்கும்போது மணம், புகை, காற்றின் அமுக்கம் ஏற்பட்டால் கதவை உடனடியாக பூட்டிவிட வேண்டும்.)

• Corridor இல் நெருப்போ, புகையோ இல்லாமல் இருந்தால், எமது திறப்புடன் வெளியேறி விடவேண்டும். கதவுகளை சாத்தி விடவேண்டும்.
• Stairwell இல் நெருப்போ, புகையோ ஏற்பட்டால் வேறு ஒரு பாதையை தெரிவுசெய்தல் வேண்டும். வேறு ஒரு வெளியேறும் பாதையும் தடுக்கப்பட்டால் சொந்த Unit / Suite இற்கு செல்வதே நல்லது.

### நாம் வசிக்கும் அறையை (Unit) விட்டு விலக முடியாது போனால் -

• அறைக் கதவை சாத்திவிடவும். தாள்பாள் போட்டு பூட்டக்கூடாது.
• புகை உள்ளே வராதபடி, கதவின் கீழ் பக்கத்தை ஈரச்சீலையால் மூடிவிடல் வேண்டும்.
• நிலத்துடன் (Floor) இருத்தல் வேண்டும். (வெப்பமும், Toxic Gas இம் மேலே எழும்)
• Fire fighters இற்கு வெள்ளைத்துணியில் சைகை செய்தல் வேண்டும்.
• காப்பாற்றுபவர்கள் வரும்வரை அமைதியாக இருத்தல் வேண்டும்.
• பல்கணியில் நிற்பது நல்லது.
• பாய்தல் கூடாது. (Don't Jump)
• கட்டிடத்திற்குரிய Speaker இல் தெரிவிக்கப் படும் அறிவுறுத்தல்களின்படி செயல்படுதல் வேண்டும்.

### பொதுவாக உயரமான அடுக்ககத்தில் (Highrise Apartment) வாழ்பவர்கள் வைத்திருக்க வேண்டியவை (Survival Kit)




1. Wet towel (கதவின் அடிப்பகுதியியை அடைப்பதற்கு)
2. Duct tape (கதவினதும், காற்று வரும் பகுதியையும் அடைக்க)
3. Foil wrap (Vent opening களை அடைப்பதற்கு)
4. Whistle (உதவி கோருவதற்கு)
5. Flashlight ( சிலவேளை வெளிச்சம் (Electric power இல்லாதுபோனால் பாவிப்பதற்கு, உதவி தேடுவதற்கு)
6. Bright coloured cloth - சாளரத்தில் (யன்னலில்) அல்லது பல்கணியில் கட்டுவதன் மூலம் இடத்தை இலகுவாக காட்டிக் கொடுக்க முடியும்.
7. Ink marker (விடயங்களை எழுதித தெரிவிப்பதற்கு)
8. Cotton bed sheet (அறையில் புகை அதிகமாகக் காணப்பட்டால் Bed sheet ஐ தண்ணீரால் ஈரமாக யன்னலின் ஓரமாக ஒரு Tent உருவாக்க வேண்டும்.

## நாமும் நமது இல்லமும்

**ராஜா மகேந்திரன்**

9. Wash cloth (Wash cloth ஈரமாக்கி வாயையும் மூக்கையும் இலேசாக மூடுவதால் சுவாசிப்பது இலகுவாக்கப்படும்.
10. Fire safety plan ( எமது அடுக்ககத்தின் அவசரத்தேவைக்கான படிமுறைகள் அடங்கிய புத்தகத் தொகுப்பை வைத்திருத்தல் வேண்டும்.
11. Plastic pail with lid (இதற்குள் மேலே கூறப்பட்டவையை சேகரித்து வைத்திருக்க முடியும். தீபிடிக்கும் போது இதனை தண்ணீர் நிரப்பி வைத்திருக்க முடியும்.

### நீண்டகாலம் பாவனையில் இல்லாமல் இருக்கும் வீட்டை வாங்கும் போது கவனமாக இருத்தல் வேண்டும்.

• Soil Expansion - பொதுவாக பாவனையில் இருக்கும் வீட்டின் புற்தரை சரிவர கவனிப்ப தில்லை. இதனால் நிலத்தில் இருக்கும் ஈரத் தன்மையை காலப்போக்கில் இழந்துவிடும். அதற்கப்புறம், புதியவீட்டு உரிமையாளர் வீட்டை சொந்தமாக்கிய பிறகு தண்ணீரைச் செலுத்துவ தால் நிலத்திலிருக்கும் மண் விரிவடையத் தொடங்கும். இதனால் விரிவடையும் நிலம் Foundation ஐ பாதிப்படைய செய்யும். அதாவது Foundationஐ உள்நோக்கி தள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம்.

• Water Heater : Water Heater பாவிக்காமல் விடுவதால், சேமித்து நிற்கும் தண்ணீரில் இருக்கும் Sediment சேரத்தொடங்கும். Water Heater இன் தொழில்களில் மாற்றங்கள் ஏற்படும்.

Appliances _ Dishwasher, garbage disposal இன் Motor கள் தொழில்புரியாமல் போகக் கூடிய சந்தர்ப்பம் அதிகம். Seal கள் சிலவேளை உலர்ந்து தண்ணீர் வடியும் சந்தர்ப்பம் அதிகம்.

Thermal Expansion - பொதுவாக பாவனையில் இல்லாத வீட்டின் உட்புறத்தின் வெப்பநிலை சீரற்று காணப்படும். பொதுவாக Metal window, frame, Hardware போன்றவற்றில் வித்தியாசமான விரிவு, சுருக்கம் ஏற்படும். இதனால் Lumber, Drywall, Plaster போன்றவற்றில் வெடிப்பு ஏற்படலாம்.

Roof - தண்ணீர் ஓடும்பகுதிகள், ஒழுங்காக கவனம் எடுக்காமல் இருப்பதால், தண்ணீர் தேங்கக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. இதனால் கூரையினூடாக தண்ணீர் கசியலாம். சில வீடுகளில் Racoon குடிகொண்டும் விடும். கூரையில் ஏற்பட்டிருந்த ஓட்டையால் தண்ணீர் உள்ளே சென்று Ceiling ஐ பழுதாக்கிவிடும்.

Plumbing - தண்ணீர் ஓட்டம் இல்லாததால் கழிவுகள் தேங்கி உறைந்து விடக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. மற்றும் Sediment blockage உம் ஏற்படலாம். எனவே வெளியேறும் வீதம் குறைவடையும்.

Mechanical Devices - Furnace (வெப்ப சூளை) பாவிக்காமல் விட்டு பின்பு பாவிக்கத் தொடங்கும் போது Heat Exchanger இல் வெடிப்புகள் ஏற்படலாம். சில மெக்கானிக்கல் உபகரணங் கள் நீண்ட காலமாக பாவிக்காமல் விட்டால் பின்பு தொழில் புரியாமல் போய்விடக்கூடும். உதாரணமாக Air Condition unit, Hvac Systems.




Raja Mahendran, P.Eng.
Broker/Owner
Cell: 416.315.9397
Off : 416.321.6969



Kennedy/Ellesmere



Condo Townhouse
New Painted, Low Maintenance Fee
3 Bedrooms, 2 Washrooms
$209,900

Markham/Highglen



Brand New Condo Apt.
5 New Appliances
2+Den Bedrooms
(Can be used as Bedroom)
2 Washrooms, 1 Kitchen
$208,900

Taunton(Steels)/Westny



Brand New Detached 2-Story
Tribute Builders, 9'Ceiling
50' Frontage, over $40k Upgrades
3198 SFT, Hardwood Floor
4 Bedrooms, 4 washrooms
$439,900

Neilson/Sheppard



Condo Apt.,Corner unit
2 Bedrooms, 2 Washrooms
Close to Mall
$124,900

Main/Danforth

Excellent Bargain
Store (Near Main/Danforth)
Over 2200 Sft, Full Basement
Low Rent, Established
Business For 10 Years
Asking $119,000
$119,000

Good Location

Store And Apartment In Toronto
Store About 1500 Sft
With Full Basement
2 Apartments 3 Bedrooms Each,
Big Lot, Good Income
Store (Variety) Rented
For $2000/Mth
GOOD INVESTMENT!
Reasonable Price



சீலன் (சிவா)
Sales Representative
Cell: 416-451-0271
Web: www.veedu4u.com
Email:seelan@veedu4u.com
வீடு4u.com

Sheppard/Moringside



Brand New
Detached
$$$ Upgrades
2600 SFT.
4 Bedrooms
3 Washrooms
9' Ceiling
$419,900

Neilson/Sheppard



Detached
2-Story
3+1 Bedrooms
3 Washrooms
2 Kitchens
Sept.Entrance
$274,000

Bellamy/Eglinton



Condo Apt.
2+1 Bedrooms
2 Washrooms
1 kitchens
$154,900

Neilson/Stains



Freehold
townhouse
Corner unit
3 Bedrooms
3 Washrooms
1 kitchens
$$$ upgrades
$274,900

Westny/Tauntan



Detached
4 Bedrooms
3 Washrooms
9' Ft Ceiling
3000 Sft
$368,000

Steeles/Staines



Brand New
Detached
2-Story
3 Bedrooms
3 Washrooms
$388,800

HOMELIFE/GTA
Realty Inc.
1711McCowan Rd. Suite 206, Toronto, ON M1S-3Y3
Bus:(416)321-6969 Fax:(416)321-6963

# நோய்களின் தாய்வீடு கோபம்

அடிக்கடி கோபப்படாதே கோபம் ஆயுளைக் குறைக்கும். ஒரு மனிதனது வாழ்க்கை ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால், அவன் அடிக்கடி கோபத்தில் கொந்தளிப்பதைக் கைவிட வேண்டும். கோபம் வரும்போது அவனது உணர்வுகள் மனக்கட்டுப்பாட்டில் இருக்காது என்பதை முதலில் உணர வேண்டும். எனவே கோபம் தேவையா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். சிலர் கோபம் தேவை என்பார்கள். அதற்கு அவர்கள் என்ன கூறுவார்கள் தெரியுமா? கோபப்பட்டால் தான் சிலரை வேலை வாங்க முடியும். சினம் சீறிவரும் போதுதான் கொடுத்த கடன் கைக்கு வருகிறது. கோபம் கொந்தளித்தால் தான், உறவுமுறை பரம்பரை சொத்துக்கு முடிவு உண்டாகிறது. அதனால் கோபம் தேவைதானே என்பார்கள்.

அதே கோபம் வரம்பு மீறும் போது, கத்தி, குத்து, வெட்டு, கலவரம், காவலர் தொல்லை, நீதிமன்ற வழக்கு, பணம், செலவு என்று வரும்போது கோபப்படக்கூடாது என்று புத்திகூற ஆரம்பிப்பார்கள். அனுபவங்களுக்குப் பிறகு தான் இந்த ஞானோதயமே பிறக்கும்.

எனவே சற்று தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்தார்களானால் கோபம் கேடானது என்பதை உணர்வார்கள். ஆனால் கோபம் வரும்போது சிந்தனையே அழிந்து விடுமே, பிறகு எப்படி அவர்கள் சிந்திப்பார்கள்.

இப்படிக் கோபம் வந்தால் ஒருவனது ஆரோக்கியவாழ்க்கை எப்படிச் சீரழிகிறது அதற்கு விஞ்ஞான விளக்கத்தைப் பார்ப்போம். சினம் அலைபோல மனதில் மோதும் போது, அவன் தனது ஆயுளில் பெரும் பகுதியைச் சிறிது சிறிதாக இழந்து விடுகிறான். அது எப்படி என்கிறீர்களா? வெகுளி அவனை உணர்வுகள் என்ற நெருப்பிலே வேகவைக்கும்போது அவனது உடல் இரசாயனத்திலே ஒன்றான அட்ரினலின் (Adrenaline) என்ற இரசாயனம் அவனது உடலிலே இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்துகிறது. இந்த இரத்த அழுத்த அதிகரிப்பு தான் "உயர் இரத்த அழுத்த நோய்" எனப்படும். கோபப்படும் அந்த நிமிடத்திலே இரத்த அழுத்தத்தைப் சோதித்துப் பாருங்கள். உண்மையை உணர்வீர்கள்.



கோபம் அதிகமாகும் போது, தலைச்சுற்றல் வரும். இதற்குக் காரணம் இரத்தக் கொதிப்பின் வேகம்தான். இந்த இரத்தக் கொதிப்பின் காரணம் புரியாமல் வைத்தியரிடம் ஓடுகிறோம். அவர் அதற்குரிய சோதனை செய்கிறார். மருத்துவம் வியாபாரமாகி விட்டதால் சில வைத்தியர்கள் உடனே இ.சி.ஜி (Electrocardiogram) எடு என்கிறார்கள். இருக்கும் பணத்தில் இ.சி.ஜி எடுத்துவிட்டு இரத்தக்கொதிப்பு (blood Pressure) சோதனையை பார்த்துவிட்டு அவர் எழுதிக்கொடுக்கும் மருந்தை சாப்பிட்ட பின்பு இரத்தக்கொதிப்பு குறைகின்றது.

எனவே கோபம் உண்டாகும் போது இரத்தக் கொதிப்பு ஏறுவதும் கோபம் தணிந்த பின்பு இரத்தக் கொதிப்பு குறைந்தும் விடுகின்றது. அதனால் தொடர்ந்து கோபப்பட்டுக் கொண்டே இருப்பவன் கதி என்ன? கொஞ்சம் சிந்தனை செய்து பாருங்கள்.

இவ்வாறு தொடர் கோபம் வந்து கொண்டே இருப்பதைத்தான் வைத்தியர்கள் கட்டுப்படுத்த முடியாத கோபம் (Anger) என்று பெயரிடுகிறார்கள். கோபம் தொடர்ந்து வந்தால் நாம் நமது இயல்பான நிலைக்கு வர முடியாமலே போனாலும் போய்விடலாம். அப்போது நமது நிலை என்ன?

எனவே விஞ்ஞானம் கூறும் விளக்கத்தின்படி கோபம் கொள்பவன் தனது உடலில் பாதிப்பை பெறுகிறான் அல்லவா? இறுதியிலே இறப்பை உடல் பெறும் நிலைக்கு வரும். மனிதன் தனது உடல் ஆரோக்கியம் என்ற சுயநலத்துக்காகவாவது கோபம் வராமல் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது நல்லது. நீண்டநாட்கள் வாழ, உடல் நலத்தோடு வாழ உடல் வளமாக வாழ கோபத்தைக் கைவிடுவது நல்லது.



ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி

# டொலரில் Terry Fox



சைமன் பிறேசர் பல்கலைக்கழகத்தில் The Royal Canadian Mint, ஒரு டொலர் நாணயத்தில் ஒருகால் ஓட்டக்காரன் Terry Fox இன் உருவத்தை வெளியிட்டுள்ளனர். ஏப்ரல் 04, 2005 ந்திகதி முதல் புழக்கத்தில் கொண்டுவரப்படும் இந்த நாணயத்தில் இவரின் உருவம் காணப்படும். இவர் தனது 18ஆவது வயதில் (1977ஆம் ஆண்டு) Bone cancer இருப்பதைக் கண்டு பிடித்தார்கள். இதனால் இவரின் வலது கால் முழங்காலிற்கு மேலாக நீக்கப்பட்டது. ஏப்ரல் 12, 1980 ஆம் ஆண்டு சென். ஜோன்ஸிலிருந்து மரதன் ஓடத்தொடங்கினார். 143 நாட்கள் 5,373 கிலோ மீற்றர் ஓடியபோது அவரிற்கு ஏற்பட்ட சுகயீனத்தால் இவரது ஓட்டம் தண்டபேயில் நிறுத்தப்பட்டது. தனது 22ஆவது வயதில் காலமானார். இந்தக் காலத்தில் கனடாவில் 22 மில்லியன் டொலர் சேர்ப்பது அவரது நோக்கமாக இருந்தது. அதாவது ஒருவருக்கு ஒரு டொலர் என்ற கணக்கில். ஆனால் உலகளாவியரீதியில் 360 மில்லியன் சேர்க்கப்பட்டது. இந்த டொலர் வெளியீட்டில் கலந்து கொண்ட Terry Fox இன் சகோதரர் இந்த டொலரை Loonie என்று அழைப்பதற்கு பதிலாக Terry என்று அழைப்பது நன்றாக இருக்கும் என்று தனது எண்ணக்கருத்தைத் தெரிவித்தார்.


## SRI PARADISE Catering & Take -out

416.269.4509 / 416.509.2454

292 Markham Road, Scarborough, ON

திங்கள் - செவ்வாய்
சிங்கப்பூர் நூடில்ஸ்
(கோழி மரக்கறிகளுடன்)
$2 99

புதன் - வியாழன்
கொத்துரொட்டி
ஆடு மாடு கோழி
$2 99

வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை
$4 50

Daily special
மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு
$2 99

Dinner Special
சிங்கப்பூர் நூடில்ஸ்
கோழி மரக்கறிகளுடன்
$2 99

சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு
கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல்
$5 99



பரடைசின் Special
புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad
$2 99

Dinner Special
மசாலா தோசை, சாம்பாறு, சம்பல்
$1 99

Daily Special
பரடைசின் Special
புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை
$2 99

### Sri Paradiase Specials

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# மனவெளி கலையாற்றுக் குழு

‘ஹலோ!’
‘வணக்கம் ஐயா! என்ன... நாடகம் நடிச்சியளாம்?’

‘கேள்வியைப் பார்த்தால் நீங்கள் நாடகத்தைப் பார்க்கேல்லை என்று தெரியுது...’

‘நான் இரவுவேலைக் காரனல்லே. என்னுடைய உலகமே வேறை.’

‘இரவோ பகலோ நாடகமே உலகம்.’

‘சரி, அப்படித்தான் என்றால் இவ்வளவு நாளும் உங்கடை நாடகம் எங்கை கிடந்தது?’

‘உறங்கிக் கிடந்தது.. .. என்று சொல்ல முடியாது. கனடாவில் இரண்டு தடவைகள் அது விழித்திருக்கு. முதல் முதல் ஒரு தொடர் வானொலி நாடகத்தில் என்னை நடிக்க வைத்தவர் வானொலி-தொலைக்காட்சி விற்பன்னர் திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள். நாடகத்தின் பெயர் என்ன தெரியுமோ? ....’

## அறுவை - 38

‘தெரியும் - வாழ்ந்து பார்க்கலாம்.’

‘விவாக ரத்து என்று மற்றுமொரு நாடகம். மகாஜனக் கல்லூரி ஆண்டு விழாவில் மேடையேறியது. அதனை நெறிப்படுத்தியதோடு அதில் நடித்தும் இருக்கிறேன்.’

‘இவை போதுமென்று நினைக்கிறியளா?’

‘போதாதுதான். தாயகத்தில் பன்முகப்பட்ட துறைகளில் ஈடுபட்டதைப் போன்று கனடாவில் இயங்க முடியாது என்பதை நன்கு தெரிந்து கொண்டு, சுமக்கக்கூடியதை மட்டும் சுமந்து கொண்டிருக்கிறேன். ஒதுக்கியவற்றுள் நாடகமும் ஒன்று. காரணங்கள் பல. நாடகத்துக்குக் கடும் உழைப்பு வேண்டும். கடுமையாக உழைப்பதற்குப் போதிய நேரம் வேண்டும். அத்துடன் தரமான நாடக அரங்கேற்றத்துக்கு நிறையப் பணமும் வேண்டும். இவற்றால் போய்விட்டுவாரும் என்று நாடகத்தை எப்பொழுதோ வழியனுப்பிவிட்டேன்.



‘இப்படி இருந்து வந்த காலத்திலே கலைஞர் வ. திவ்வியராஜன் ஒருநாள் தொலை பேசியில் மனவெளி கலையாற்றுக் குழுவுக்கு குழந்தை ம. சண்முகலிங்கத்தின் ‘நரகோடு சுவர்க்கம்’ என்ற நாடகத்தை இயக்கவிருப்பதாகச் சொல்லி அதில் நடிக்கும்படி கேட்டார். அவருக்கு எனது சங்கடங்களைக் கூறி ஒப்பாரி வைத்தேன். சொட்டுக் கண்ணீர்தானும் அவர் விட்டதாகத் தெரியவில்லை. இரண்டு நாட்களின்பின் நண்பர்கள் புராந்தகனும் செல்வனும் வீட்டுக்கு வந்தார்கள். அவர்களது யாவரதும் பண்பையும் பயனையும் நன்கு அறிந்துகொள்ள முடிந்தது. அவர்க ளிடத்திற் கச்சிதமான கட்டமைப்பும் கட்டுப்பாடும் இருக்கின்றன. ஒற்றுமையுடன் பல ஒழுங்குகளையும் கவனிக்கிறார்கள். பிரச்சனைகளைச் சிரித்துக்கொண்டே தீர்த்துக்கொள் கிறார்கள். நடிகர்களின் வசதிக்கேற்ப ஒத்திக்கைகளை ஒழுங்கு செய்கிறார்கள். போக்கு வரத்து வசதிகளை வழங்கி உரிய நேரத்துக்கு எல்லோரையும் ஒன்றுகூட்டுகிறார்கள். எல்லாவற்றுக்கும் வேண்டுகோளைத் தட்டிக்கழிக்க முடிய வில்லை.

‘மேலும் மனவெளிக் கலையாற்றுக் குழு வல்லமை மிகுந்த ஓர் அமைப்பு. அரங்காடல் என்ற பெயரிற் கடந்த பதினொரு வருடங்களாகத் தரமான நாடகங்களை வழங்கிய சிறப்பு அதற்குரியது. அவற்றில் பலவற்றை நான் பார்த்திருக்கிறேன். பார்த்துப் பெருமைப்பட்டிருக் கிறேன். இப்பொழுது நடிக்கச்சென்றபிறகு குழுவின் பொறுப்பாளர்கள், இயக்குநர்கள், நடிகர்கள் மேலாகச் சிறந்த நாடகங்களால் தமிழ் நாடகத்துறையை இந்த மண்ணில் வளர்த்தெடுக்க வேண்டும் என்னும் அவர்களது இலட்சியம் வலுவானது.

‘கடந்த 13.03.2005 ஞாயிற்றுக்கிழமை மனவெளிக் கலையாற்றுக் குழுவின் 12ஆவது அரங்காடல் மாக்கம் கலையரங்கில் பகல் ஒன்றும் இரவொன்றுமாக இரு தடவைகள் நடந்தது. வ. திவ்வியராஜன் இயக்கத்தில் குழந்தை ம. சண்மகலிங்கத்தின் ‘நரகோடு சுவர்க்கம்’, சத்தியகுமார் ஜெயபாலின் இயக்கத்தில் சகாப்தனின் ‘அரியது கேட்கின் ...’, துஷி ஞானப்பிரகாசத்தின் நெறியாள்கையில் மறியோ பிறற்றியின் ‘வதை’ ஆகிய மூன்று நாடகங்களும் ‘மறுமுகம்’ என்னும் நாட்டிய நாடகமும் அரங்காடப்பட்டன. நாட்டிய நாடகத்ததை தர்சினி வரப்பிரகாசம், பிரஷாந்தி பத்மநாதன், சௌமியா தயாளன் ஆகியோர் இணைந்து தயாரித்திருந்தனர். நல்லதோர் கலை விருந்தைச் சுவைக்க நீங்கள் கொடுத்துவைக்கவில்லை.’

‘இப்ப உங்களோடு கதைச்சதே கொடுத்துவைச்சமாதிரித்தான்.’

‘அப்ப வைக்கட்டே!’

‘நன்றி ஐயா! வணக்கம்.’

**பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்**
**சத்தியமும் வாங்கிப் போட்டாள் -**
**சகோதரரே**
**தாசிகள் நேசம் மோசமே - தொலை**
**பேசிகள் நேசம் வாழ்கவே!**




கவிஞர் வி. கந்தவனம்





# மேலைத் தேசத்தில்
# கீழைத் தேசத்து வாசனைகள்...

**Niru BRAND®**

## எமது புதிய அறிமுகங்கள்




Imported & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
76, Howden Road, Scarborough.
Ontario, CANADA, M1R 3 E 4
Tel: (416) 750 1976
Fax: (416) 750 8779
www.niru.com

**NIRU (EUROPE) LTD.**
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road, Mitcham,
Surrey, CR4 2AP. U.K.
Tel: +44 208 640 8228
Fax:+44 208 640 8312

# ஆயுள் காப்புறுதியில் எப்படிப்பட்ட வகை வகையான ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களை கம்பனிகள் பொதுவாக விநியோகிக்கின்றன?

*அடிப்படையில் ஆயுள் காப்புறுதி பெற்றுக் கொள்பவரின் நோக்கங்களை அடிப்படையாக வைத்து இதனை இரு பிரிவினுள் குறிப்பிடலாம். ஒரு பொறுப்பான நிலைமையில் இருக்கும் ஒரு குடும்பத்தவர் அதாவது தம்மில் தங்கியிருப்பவர்கள் (மனைவி, அல்லது கணவன், பிள்ளைகள் என) பலர் இருக்கும் நிலைமையில் வாழ்பவர் வாழ வேண்டிய தமது காலத்தில் ஏற்படும் உயிர் இழப்பு (Premautred Death) குடும்பத்தவர்களை பாதிக்காது இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மட்டும் பெற்றுக் கொள்ள வேண்டியது.*


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


*அ. தற்காலிகமான ஆயுள் காப்புறுதித் திட்டம் (Term Life Insurance Plan)*

*இது மாதா மாதம் செலுத்த வேண்டிய கட்டுப்பணமும் மிகக் குறைவாகும். அதாவது 30-35 வயது நிலையில் இருக்கும் ஒரு தம்பதிகள் ஒரு இலட்சம் டொலருக்கு இவ்வகையான ஆயுள் காப்புறுதி செய்யும் போது மாதக் கட்டுப்பணம் 20 டொலருக்குள் அடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

*ஒரு குறிப்பிட்ட காலம் வரையே இது செல்லுபடியாகும். அதன் பின்னர் காலாவதியாகி விடும். மாதம் செலுத்திய பணம் செலுத்தியது தான். அதாவது உயிர் இழப்பு ஒன்று நடந்தால் மட்டும் குறிப்பிடப்பட்ட நட்ட*



*ஈட்டுத்தொகை கிடைக்கும். இதிலும் நிரந்தரமாக குறிப்பிடப்பட்ட ஒரு வயதின் முன்னர் மாற்றியமைக்க கூடிய ஆயுள் காப்புறுதித் திட்டம் (Convertible Term Insurance) என ஒரு பிரிவும் இருப்பதால் விரும்பிய நேரம் நிரந்தரமான பத்திரமாக மாற்றியமைக்கலாம்.*

*மேலே குறிப்பிடப்பட்ட குடும்பத்திற்கு ஒரு பாதுகாப்பு என்பதுடன் குடும்பத்திற்கு அல்லது அடுத்த சந்ததியினருக்கு ஒரு முதலீடு (Investment to next generation) என்று மேலும் அடுத்த நோக்கத்தினையும் சேர்த்து ஆயுள் காப்புறுதி பெற விரும்புபவர் பெற்றுக்கொள்ள வேண்டியது.*

*ஆ. நிரந்தரமான வாழ்நாள் முழுவதும் உள்ள ஆயுள் காப்புறுதித் திட்டம் (Whole life insurance plan) இது தற்காலிகமான ஆயுள் காப்புறுதி திட்டத்தினை (Term life insurance) விட விலை அதிகமாகும்.*

*நிரந்தரமான வாழ்நாள் முழுவதும் உள்ள ஆயுள் காப்புறுதித் திட்டத்தில் பலவகையான அம்சங்கள் உள்ளன. அதாவது*

*a. முதலீட்டுத் திட்டத்துடன் சேர்ந்த ஆயுள் காப்புறுதித் திட்டம் (Life insurance with investment)*

*b. சில குறிப்பிட்ட காலங்களுக்குப் பின்னர் பணமே செலுத்தத் தேவையில்லாத ஆயுள் காப்புறுதித் திட்டம்.*

*c. பணம் பெறுமதியுடன் கூடிய ஆயுள் காப்புறுதித் திட்டம் (Life insurance with cash value) போன்ற பல்வேறு வகையான திட்டங்களையும் கனடாவில் உள்ள பல்வேறு வகையான கம்பனிகளும் சந்தைப்படுத்துகின்றன.*

## *ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் மாதம் மாதம் செலுத்த வேண்டிய கட்டுப்பணம் என்பதனை தீர்மானிக்கும் பிரதான அம்சங்கள் யாவை?*

*பின்வரும் அம்சங்கள் விலையினை நிர்ணயம் செய்கின்றது.*

*அ. வயது (Age)*

*வயது அதிகரிக்க அதிகரிக்க மாதக் கட்டுப்பணமும் அதிகரித்துக் கொண்டே போகும்.*

*ஆ. ஆணா? பெண்ணா? என்ற விடயம் (Gender)*

*பொதுவாக கனடாவில் பெண்களின் ஆயுள்காலம், ஆண்களைவிட அதிகமாகவே இருப்பதால் பெண்களுக்கு ஆண்களைவிட மாதக் கட்டுப்பணம் சற்றுக் குறைவாகவே இருக்கும்.*

*இ. புகைத்தல் போன்ற வஸ்துகள், புகையிலை உபயோகங்களுக்கு உட்பட்டவரா? இல்லையா? என்ற விடயம்*

*ஈ. உடல் மருத்துவ நிலைகள் (Health Situtation)*

*உடல் மருத்துவ நிலைகள் பாதகமாக இருந்தால் ஒன்றில் விலையினை அதிகரிப்பார்கள். அல்லது விண்ணப்பத்தினை காப்புறுதி கம்பனி நிராகரிக்கும்.*



*உயிரிழப்பு நடந்தால் உயிர் இழப்புக்கு உரியவரின் குடும்பத்தினர் நட்ட ஈட்டினை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்?*


இனவாதத்திற்கு எதிரான தமிழர் அமைப்பு

## பொதுப்பேரரங்கு

காலம்: மார்ச் 19, 2005 சனிக்கிழமை

நேரம்: காலை 9:00 மணி தொடக்கம் பி.ப 12,00 மணிவரை

இடம்: ஸ்காபரோ சிவிக் சென்ரர், 150 பொறோ டிறைவ்

தொடர்புகளுக்கு: 416.757.6043 / 416.265.0514



17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

## யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 161



**இட - வல**

1. சிலப்பதிகார காலத்தில் தமிழ் நாட்டில் பாவனையில் இருந்த ஒரு நரம்பிசைக்கருவி
3. ஆழிப்பேரலை (வல - இட)
4. மலர்
5. உட்கார் (வல - இட)
6. ஒரு மிருகம் (வல - இட)
7. நாங்கள் (வல - இட)
9. ஆறாவது அறிவு
10. இனிமை
11. பிரியம்

**மேல் - கீழ்**

1. இஸ்லாமியர் நோன்பு முடிவில் உண்ணும் பழம்
2. பிரயாணம்
3. முறம்
6. தோல் வாத்தியம் ஒன்று
7. பெண் எருமை
8. மிகு மகிழ்ச்சி
10. நெருப்பு
11. புத்தி கூறு (கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சு | ற் | று | ப் | பு | ற | ம் | |
| ற் | | யி | | ன | | ஓ | டு |
| ற | | க | ன் | ன | ம் | | |
| த் | | | கூ | கை | | வி | பு |
| தா | ள் | | | | | | ண் |
| ர் | | உ | த் | த | மி | | ணா |
| | | ர | | ளை | வா | | க் |
| ரி | லூ | ல் | க | | சு | | கு |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் March 28, 2005க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

160இல் வெற்றி பெற்றோர்

1) P. Shanmugam, Donmills
2) Sarojini kadirgamarajayogan, Scarborough

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



## DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

416-835-6695

Call : ‘RAJ’

for all kinds of Debt & Mortgage Solution

Lendingtree.ca

# வெற்றிபெற்ற மனிதரெல்லாம் புத்திசாலியில்லை

வெற்றியைச் சுற்றியே எமது எண்ணங்கள் அடிக்கடி வலம் வந்து கொண்டிருக்கின்றன. ஆனாலும் வெற்றி நமது கைகளுக்குள் அடங்காமலும் அகப்படாமலும் விலகிக் கொண்டேயிருக்கின்றது. “முயற்சி திருவினை யாக்கும்” “ஊக்கமது கைவிடேல்” என்பதற்கமைய அயர்ச்சியின்றி முயற்சி செய்தால் உயர்ச்சி காணலாம். முயற்சி உடையவர் இகழ்ச்சி அடையாமல் ஊழையும் உட்பக்கம் காணலாம் என்பது வள்ளுவர் வாக்கு. சாதனையாளரின் சரித்திரம் புகட்டும் உண்மை இது.

ஆனால் வாழ்க்கை என்பது ஒரு போராட்டம். பலவிதமான பிரச்சினைகள் அங்கு உருவாகின்றன. அவற்றிற்கு முகம் கொடுத்தே ஆக வேண்டும். தன்னம்பிக்கையும் மனத்திடமும் ஒருவரை முன்நிலைக்குக் கொண்டுவந்து தன் நிலையை உயர்த்திவிடுகின்றன. முயற்சிக்கு மேலாக சந்தர்ப்பமும் அதிஷ்டமும் ஒருவரை சாதனையாளராக ஆக்கி விடுவதும் வாழ்வில் நிகழ்ந்து விடுகின்றது. இது அபூர்வமாகவே நிகழ்வதுண்டு.

குடும்பம் ஒரு கோயில் எனப்படுகின்றது. அன்பு, பாசம், தியாகம், சேவை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இவை நிலவும் போது அது ஒரு கோயிலாக நிலைக்கும். இல்லையெனில் அது குழப்பமும் கொந்தளிப்பும் மலிந்த இடமாக மாறிவிடும். குடும்பம் என்னும் போது பெற்றோர், பிள்ளைகள், கணவன், மனைவி, மாமியார், மருமக்கள், பேரர், பேத்திமார், உற்றார், உறவினர் இவர்களுக்கு இடையிலான உறவு, உறுதியாக இருக்கும் போது அங்கு அமைதி நிலவும். ஆக்கம் மலரும். இல்லையெனில் நாளும் பொழுதும் சண்டையும் சச்சரவுகளும் உருவாகும். அதிகார தோரணை அதிகாரத்தை உண்டுபண்ணி வதிவிடங்களில் பல சதிகளைச் செய்து விடுகின்றது. மாமியார், மருமகள் சண்டை இதற்கு நல்ல உதாரணம். இதனால் மன உளைச்சல்களும், விரிசல்களும், பிரிவுகளும், மணமுறிவுகளும், தற்கொலைகளும் ஏற்பட்டு விடுகின்றன. வாழ்க்கை நரகமாகிவிடுகின்றது. கெடுபிடிகள் அடக்கியாளும் மனப்பாங்கு என்பன



மன இறுக்கத்தை ஏற்படுத்தி வாழ்க்கையின் வனப்பைக் குறைத்து இனசனத்தினரிடையே தினமும் கவலையை உண்டுபண்ணிவிடுகின்றன. இதைத்தவிர்த்து மனதில் அமைதி, உறுதி ஏற்படுவதற்கு வெற்றிச்சின்னத்தை பயன்படுத்தி நன்மை அடையலாம். அமைதி தரும் சின்னம் ‘வி’ என்னும் வெற்றிச் சின்னமாகும். இது எகிப்து நாட்டு ஹோரஸ் (Horus) என்ற தேவதையினால் சிருஷ்டிக்கப்பட்டதாகும். இது சக்திவாய்ந்த அமைதிச் சின்னம் என்று எகிப்து நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் பலர் தமது கார் பம்பர்களில் இந்த V ‘வி’ எழுத்தை பொறித்து வைத்திருக்கிறார்கள். கார் முன் கண்ணாடியிலும் V ஸ்ரிக்கர்களை பதித்து வைத்துள்ளார்கள். அமைதிக்கும் வெற்றிக்கும் ‘V’ சின்னம் பயன்படுகிறது என்பது அவர்கள் கருத்து.

இச் சின்னத்தை தினசரி இரவு படுப்பதற்கு முன்னர் பத்து நிமிடம் மனக்கண்ணால் பார்த்து வந்தால் எமது வாழ்க்கையில் அமைதி கிடைக்கும். அமைதியுடன் செயற்பட்டு பல காரியங்களைச் சாதிக்கலாம். தொழில் வியாபார இடங்களில் இச்சின்னத்தை வைப்பதால் அதனை அடிக்கடி பார்த்து வருவதால் மனக்குழப்பமின்றி முடிவுகள் எடுக்க முடிகின்றது என்று ஒரு பெரிய நிறுவன நிர்வாகி கூறியுள்ளார். வீட்டில் உள்ள கெடுபிடி காரணமாக வீட்டை விட்டு வெளியேறும் இளைஞர்கள் இச்சின்னத்தை பயன்படுத்தி மன அமைதி அடைய லாம். அத்துடன் சிறு திருட்டுக்களில் ஈடுபடும் சிறுவர் களும் இச்சின்னத் தை பார்த்து தியானம் செய்வ தன் மூலம் திருந்தி வாழமுடியும்.

அன்பு, பாசம் இல்லாமல் கோபப் பட்டு அதிகாரம் செய்யும் பெற்றோர்க்கும் சொன்னபடி கேட்காமல் மனம் போனபடி செயல் படும் இளைஞர் களுக்கும் இவ் வெற்றிச்சின்னம் பெரும் அளவில் உதவுகின்றது. முன்கோபம் கொள்பவர்களும் இவ்வெற்றிச் சின்னத்தை பார்த்து வந்தால் சாந்த குணத்திற்கு

**நா.க. சிவராமலிங்கம்**

மாறிவிடுகிறார்கள் எனக் கூறப்படுகின்றது. இத்தகைய பயனளிக்கும் வெற்றிச் சின்னத்தைக் கண்டுபிடித்தவர் பிரித்தானியப் பிரதமராக இருந்த சேர் வின்ஸ்டன் சேர்ச்சில் ஆவர். இருவிரல்களை ‘V’ போல்காட்டி V for Victory என்று இரண்டாம் உலகப்போரில் வெற்றி கண்டவர் அவர். வெற்றியைக் குறிக்கும் V ஐ நாம் பற்றி நின்றாலும் காலமும் நேரமும் அதற்கு சாலவும் துணையாகி ஞானத்தில் புகழ்பெற வைக்கின்றது. வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும் அதை வாங்கிவந்த பெருமை எல்லாம் என் உழைப்பைச் சேரும் என் காலம் வென்ற பின்னே வாங்கடா வாங்க.


EMBASSY

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



416-332-8451
Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944



NTE AUTO
New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.



SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL





Fork Lift licence
$75.00

Truck licence
$899.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake
$175.00

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
Pl. Call: Raja / Shan
416.412.7618/416.829.0603
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# மீண்டும் Bill Gates முதலிடம்



2005 ஆம் ஆண்டில் இந்த பூகோளத்தில் மிகப்பெரிய பணக்காரனாக Bill Gate இருக்கிறார். கடந்த வருடங்களில் பணக்காரனாகவும், மிகப்பெரிய பணக்காரனாக வளர்ந்து கொண்டுவருவதை Forbes சஞ்சிகை வெளிப்படுத்தியுள்ளது. 2003ஆம் ஆண்டில் 476 பில்லியனெயர் (Billionaire) இந்த உலகத்தில் வாழ்ந்தார்கள். ஆனால் இந்த வருடத்தில் (2005) இந்த எண்ணிக்கை 671 ஆக அதிகரித்துள்ளது. இந்த வருடத்தில் மட்டும் 131 புதிய பில்லியெனர் உருவாகி உள்ளனர். இப்பணக்காரர்களின் மொத்த பெறுமதி $2.2 Trillion us டொலராக காணப்படுகிறது. (1Trillion =1,000 Billion, 1 Billion = 1,000 Million, 1 Million = 1,000 Thousand, 1Thousand = 1, 000)) மேலும் இவர்களின் சராசரி பெறுமதி $3.2 Billion us$ ஆகவும் அதிகரித்துள்ளது.

இவ்வளர்ச்சிக்கு, உலகின் பொருளாதார வளர்ச்சி, பங்குச் சந்தை (Stock market) இன் அதிகரிப்பு, Commodity இன் விலையில் ஏற்பட்ட அதீத அதிகரிப்பு, அமெரிக்க டொலரில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஆதனத்தில் (Real Estate) ஏற்பட்ட விலை அதிகரிப்பு போன்றவையே காரணமாக கூறப்படுகின்றது.

இன்றைய பில்லியெனர்களில், உலகின் பல பாகங்களிலிருந்தும் பலர் உருவாக்கியதற்கு அமெரிக்க டொலரின் வீழ்ச்சியும் மிகப்பெரிய காரணமாக கொள்ளபடுகின்றது. Ice land என்ற நாட்டில் முதலாவது Billionaire இப்பொழுது இந்த பட்டியலில் சேர்ந்துள்ளார். வழமைபோல், இந்த வருடமும் இரண்டாவது உலகின்மிகப்பெரிய பணக்காரனாக Warren Buffet வந்துள்ளார்.

மூன்றாவது பணக்காரனாக இந்திய லக்ஷ்மி மிற்றல் (Lakshmi Mittal) காணப்படுகின்றார். கடந்த வருடம் 62-வது இடத்தில் காணப்பட்ட இவரின் ஆதனத்தின் பெறுமதி $25 Billion ஆக அதிகரித்ததால் 3-வது இடத்திற்கு மிகப்பெரிய பாய்ச்சல் செய்துள்ளார். 15-வது இடத்தில் காணப்படும் 81வயதுடைய கனடியர் Kenneth Thomson, கனடாவின் மிகப்பெரிய பணக்காரராக காணப்படுகின்றார். இவரின் பெறுமதி $17.9 Billion.

| நிலை | பெறுமதி | பெயர் | வயது | நாடு |
|---|---|---|---|---|
| #1 | 46.5B | Bill Gates | 49 | அமெரிக்கா |
| #2 | 44B | Warren Buffet | 74 | அமெரிக்கா |
| #3 | 25B | Lakshmi Mittal | 54 | இந்தியா |
| #4 | 23.8B | Carols Helu | 65 | மெக்சிக்கோ |
| #5 | 23.7B | Prince Alsavd | 48 | சவுதிஅரேபியா |
| #6 | 23B | Ingvar Kamprad | 78 | சுவீடன் |
| #15 | 17.9B | Kenneth Thomson | 81 | கனடா |

# போரும் சமாதானமும்



*கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுடைய 'War & Peace' என்னும் நூல் அறிமுக விழா கனேடியத் தமிழ் கொங்கிறஸ் ஏற்பாட்டில் மார்ச் 11, 05 சனிக்கிழமை ஸ்காபரோ நகரசபா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வை திரு. T. பிரகலாதன் வழிநடத்தினார். திரு. நேரு குணரத்தினம் நூல் ஆசிரியர் அன்ரன் பாலசிங்கம் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து அருட்திரு கலாநிதி சந்திரகாந்தன் நூலின் சிறப்பை எடுத்துரைத்தார். இறையியல் ஆய்வாளர், தத்துவவியலாளருமான வண. மேரியன் சோமவில் (Parish Minister Rev. Maryan Someville) என்ற ஆங்கிலப் பெண்மணி உரை உரைநிகழ்த்தினார். மேலும் எழுத்தாளர் தங்கவேல், கலாநிதி ஸ்ரீபவான் ஸ்ரீஸ்காந்தராஜா ஆகியோர் உரை யாற்றினர்.*

# தமிழர் வர்த்தக சம்மேளத்தின் வளர்ச்சிக்கு அனைவரினதும் உதவியை வேண்டும் புதிய நிர்வாகம்



*பங்குனி 11, 2005 திகதி கனடியத் தமிழ் ஊடங்களை அழைத்து தனது எதிர்காலத் திட்டங்களையும் சம்மேளனத்தின் நோக்கங் களையும் சம்மேளனத்தின் தலைவர் மனோ தில்லைநாதன் தெரிவித்திருந்தார். சகல ஊடகங்களையும் ஒரே மாதிரி நோக்குவதாகவும் எல்லோரினதும் குறிப்பாக ஊடகங்களினதும் உதவி நிர்வாகத்திற்கு தேவை என்பதும் அவரது வேண்டுகோளாக இருந்தது. எதிர்காலங்களில் நடைபெறும் சம்மேளனத்தின் சகல நிகழ்ச்சி களும் சகல ஊடகங்களுக்கும் தெரிவிப்பதாகவும் பணப்பற்றாக்குறை ஏற்படும் நேரங்களில் உதவியாக கேட்டுக்கொள்வதாகவும் தில்லை நாதன் தெரிவித்தார். சமூகமளித்திருந்த ஊடகவியலாளர்கள் தம்மால் செய்யக்கூடிய உதவிகளை எப்பொழுதும் செய்வதாகவும் ஏகமன-தாக தெரிவித்திருந்தார்கள். தமிழர் வர்த்தக சம்மேளனம் பொதுவானது எல்லோரினதும் நன்மை கருதியே நடைபெறவேண்டும், தனிப்பட்டவர்களின் நன்மையை முதன்மையாகக் கொள்ளக்கூடாது என்ற விடயத்தில் ஊடகவியலாளர்கள் கவனமாக இருந்தார்கள்.*

*தமது எதிர்காலத்திட்டத்தில் பொருளாதார ரீதியாக எவ்வாறு சம்மேளனத்தை முன்னேற்ற லாம் மற்றும் தமிழ் மக்களின் வலிமை எவ்வாறு மற்ற சமூகத்திற்கு தெரிவிக்கலாம் அதற்குரிய புள்ளி விவரத்தை சேகரிப்பதற்காக நிதி திரட்டுவதற்கு பாடகர் கே. ஜே. ஜேசுதாசின் இசைநிகழ்ச்சியை நடத்த இருப்பதாகவும் தெரிவித்தார். இந்த ஊடக சந்திப்பிற்கு உலகத்தமிழர், முழக்கம், சுதந்திரன், தமிழர் செந்தாமரை, உதயன், நம்நாடு, விளம்பரம் மற்றும் சில பத்திரிகைகளிலிருந்து ஆசிரியர்கள், பொறுப்பாளர்கள், நிருபர்கள் சமூகமளித்திருந்த னர்.*


SAFETY TRUCKS

Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

250 Summerlea Road, Brampton, ON



உங்கள் வருமானவரி தேவைகளுக்கு

Soft Net Solution Tax

EFILE

Personal
Small Business
Rental Statement

Ahilan Radnem
416 - 332 - 1802
Call after 6.00 pm

&

உங்கள் தையல் தேவைகளுக்கு



City Girl Sewing
Saree Blouse
Churidhar
Curtains
Alteration

Sujatha Ahilan
416 - 332 - 1802
Call after 6.00 pm

1113 – 99 Blackwell Ave., Toronto. M1B 3R5

# எண்ணங்களும் செயல்களும்

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து - குறள் 596

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்று அதாவது எண்ணுகின்ற எண்ணங்கள் எல்லாம் விழுமியதாகவும், குறிக்கோள் உடையதாகவும் இருக்க வேண்டுமென்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். எண்ணங்கள் உயர்ந்தவைகளாக இருந்தால் உயர்ந்த செயல்களுக்கு அவை நம்மை தூண்டுகின்றன. எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும். அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை நாம் விடக்கூடாது. எதை நாம் நினைக்கிறோமோ அதாக நாம் ஆகிறோம். எதை நாம் விரும்புகிறோமோ அதை நாம் அடைகிறோம். எந்த எண்ணங்கள் நம் மனதில் உலவுகிறதோ அந்த எண்ணங்கள் எமக்கு அதன் பிரதிபலனை கொடுக்கின்றன.

மக்களுடைய உள்ளத்தில் உணர்ச்சிகளையும், ஒழுக்க நெறிகளையும் சமயவாழ்வையும், அறிவுநிலையையும் தெரிவிக்கும் கருவூலங்கள் தான் எண்ணமும் செயலும். அன்பு, கருணை, ஒழுக்கம் என்று பண்பட்ட நல்ல சிந்தனைகளால் உள்ளத்தை வளர்த்து எடுத்தாலும், பலசமயம் நமக்கு நெருக்கடியான சம்பவங்கள் நிகழத்தான் செய்கின்றன. உதாரணமாக கொடுக்கல் வாங்கல்களில் தனது சுயலாபம், சுய சௌகரியம் கருதி முடிவு எடுக்கும்நிலை. தகாத உறவில் சிக்கிக் கொண்டு மற்றவரைச் சாட்டும் அநியாயம், அநீதி, திருட்டு, கொள்ளை, பாலியல் பலாத்காரம் என்று எம் கண்ணெதிரே நடந்தால் கூட, கண்ணை மூடிக்கொண்டு போகக்கூடியநிலை, எளியவர்களின் ஏழ்மையை, பலமின்மையை நமக்கு சாதகமாகப் பயன் படுத்தும் நிலை என்று வேறுபட்ட நிகழ்வுகள் நம்வாழ்வில் பல சமயம் வருகின்றன.

அத்தகைய சந்தர்பங்களில் எந்த எண்ணம் நம்மிடையே எழுகிறதோ, எந்த எண்ணம் நம் செயலை தூண்டுகிறதோ, அந்த எண்ணமும் செயலும் தான் நமது குணங்களை நிர்ணயிக்கின்றன. அவைதான் நம்மை நேர்மையானவன் என்றோ அல்லது அயோக்கியன், சந்தர்ப்பவாதி என்றோ பிறர் கூறக் காரணமாகிறது.

மனவட்டத்தில் இச்சைகள் எழுப்பும் அலைகளே எம் எண்ணங்கள். மன இச்சைகள் ஒவ்வொரு கணமும் நமது மனதில் எழும் சிந்தனைகளின் தன்மையை பிரதிபலிக்கின்றன. உதாரணம் ஒன்றை இப்போது நோக்குவோம். கோயில் படியில் யாரோ ஒருவரது விலையுயர்ந்த முத்துமாலை விழுந்து உங்கள் கண்முன் பளிச்சிடுகின்றது என வைத்துக்கொள்ளுங்கள். முத்துமாலையை எவரும் காணாமையால்



மெல்ல எடுத்துச் செல்லுவோம் என ஒரு மனம் சொல்கின்றது. ஆனால் இன்னோர் மனமோ சந்தர்ப்பம் பார்த்து அதை எடுத்து மறைத்து வைத்தாலும் கடவுள் இதைப் பார்த்து விடுவாரோ எனப்பயந்து இம்மாலையை உரியவரிடம் ஒப்படைப்பது தான் சரி எனப் புத்தி சொல்கின்றது. இதுதான் இறைவனால் உங்களுக்கு வழங்கப்பட்ட சோதனை. இதைத்தான் ஆண்டவன் தம் பக்தர்களை சோதிப்பதற்காக உருபு எடுத்து வருவதாக திருவிளையாடற்புராணக்கதைகள் கூறுகின்றன.


*ஆக்கம் - கந்தையா சண்முகம்*
*இளைப்பாறிய அதிபர் - 416-412-3570*


இப்படியான ஒரு சூழ்நிலையில் எடுக்கப்படும் முடிபுகள்தான் உங்கள் குணநலன்களை மட்டுமல்ல, உங்கள் மனதில் என்ன வகையான எண்ணங்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன என்பதையும் தீர்மானிக்கின்றன. இப்படியான இக்கட்டான சூழ்நிலைகளில் தேர்ந்து எடுக்கப்படும் முடிவு, செயல்களில் இருந்துதான் உலகம் எம்மை யோக்கியமானவரா அல்லது அயோக்கியமானவரா என்று தீர்ப்பு வழங்கும். அவன் நியாயமானவன், தவறு செய்யமாட்டான், நியாயத்திற்கு கட்டுப்பட்டவன், நேர்மையான-வன், அவனை நம்பலாமென எப்போது நம்மைப்பற்றிப் பெரும்பான்மையினர் கூறுகிறார்களோ அப்போதுதான் நாம் வாழ்வாங்கு வாழுகின்றோம். நம்பிக்கைக்கு உரிய தன்மைதான் வாழ்வின் அடிப்படை. இதைக் கொண்டுதான் உழைப்பு, விடாமுயற்சி, முடிவெடுக்கும் திறன், காலமறிந்து செயல் படுதல் என்ற எல்லாவற்றையும் உபயோகப் படுத்த வேண்டும். நேர்மையும், நம்பிக்கைக் குரிய தன்மையும் இல்லாதபோது எத்தனை உழைத்து உயர்ந்தாலும் மனிதனாக மதிக்கப்படமாட்டோம். இதைத்தான் ஆன்மீக அடிப்படை என்று கூறுகிறார்கள். நல்லவன் என்று பெயர் எடுக்கப் பல நாளாகும். ஆனால் கெட்டவன் என்று பெயர் எடுக்க ஒருகணம் மட்டுமே போதும். நாம் அனைவரும் ஆன்மீக அடிப்படைகளை நன்கு வளர்த்துக்கொள்ள பழகிக்கொள்ள வேண்டும். தீயஎண்ணங்கள், அதன்விளைவுகளை எண்ணிப் பயப்படுவதோடு நல்லெண்ணங்களை மட்டுமே மனதில் போட மனதை நெறிப்படுத்தவேண்டும்.

நேர்மையானவன் ஆக நீ உருவாகும் போது, உன்னைப்பற்றி நீயே பெருமைப்படுவாய். இந்த உலகமே பெருமைப்படும். உன்னுடைய புற சூழ்நிலைகளில் நீ விரும்பும் மாறுதல்கள் எல்லாம் உனது நன்மைக்காகவே நிகழ்வதைக் காண்பாய். ஆசைகளின் தூண்டுதலை தவிர்த்து, நெறிகளுடன் வாழ்வது எளிதல்லத்தான். அதுதான் வாழ்க்கைப்போராட்டம். ஜீவமுயற்சி. அதில் வெற்றி பெறும் ஆன்மாக்களே மனிதர்கள். அப்படிப்பட்ட மனிதர்கள் தான் பரிணாம வளர்ச்சியில் தம்மையும் இணைத்து உயர்கிறார்கள்.

**மக்களுடைய உள்ளத்தில் உணர்ச்சிகளையும், ஒழுக்க நெறிகளையும் சமயவாழ்வையும், அறிவுநிலையையும் தெரிவிக்கும் கருவூலங்கள் தான் எண்ணமும் செயலும்.**

வாழ்க்கை என்பது தேவனாகும் முயற்சி. அதனால்தான் பாரதி, “வானகம் இங்கு தென்படவேண்டும்” என்று முழங்கினார். உன்னை நம்பு. நல்ல எண்ணங்களை வளர்த்து, பிறருடைய நம்பிக்கைக்கு உரியவனாக செயல்படு. சத்தியத்தை இலட்சியமாக நீதியை நிறைகோலாக நேர்மையை, நியாயத்தை வாழ்க்கையின் குறிக்கோளாக கொள். வாழ்வின் வெற்றி நிச்சயம் உன்கையில் தான்.


## WAREHOUSE SALE



**நம்பிக்கை, தரம், குறைந்த விலையில் நிறைந்த பொருட்கள் விசேட மலிவு விற்பனையில் உண்டு.**



- நம்பமுடியாத, வேறு எங்கும் பெறமுடியாத விலையில் Blankets.
- விதம்விதமான Shirts, T Shirts வகைகள்
- பெரியவர்களுக்கான Gloves, Shoes
- சமையலுக்குத் தேவையான பொருட்கள்
- Traveling Suitcase

இன்னும் பல பொருட்கள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: Raja / Shawn

**(416) 412.6180**

**40 Nugget Ave.**
**Unit #8**
**Mccowan & Nugget**



## ONTARIO REHABILITATION & RECOVERY CENTRE

- வாகன விபத்து
- விளையாட்டு முறிவு, தறிவு
- தசை நார் ஈய்வு
- நாரி நோவு, பிடிப்பு
- வேலைத்தள பாதிப்பு
- முள்ளந்தண்டு விலகல்
- கழுத்து பிடிப்பு
- பழைய நோவு

போன்றவற்றிலிருந்து மீள்வதற்கான பராமரிப்பு, உடற்பயிற்சிகள், தகுந்த ஆலோசனைகளிற்கான மையம்.

அக்குபஞ்சர் மற்றும் லேசர் மருத்துவம் போஷாக்கு பற்றிய அறிவுரை பராமரிப்பு.

**Specialists In:**
Chiropractic, Massage Therapy, Acupuncture, Laser Therapy, Physiotherapy and Exercise / Sports Injuries

Tel.: 416.291.0299
Fax:416.291.0994
240 Alton Tower Circle, Unit 200
Scarborough, ON M1V 4P2





# திருமணத்திற்கான தடைக்கற்கள்

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

நான் கண்டுகொள்ளாத சில விடயங்களையும் அன்பு அரவணைத்துக்கொள்ளும் என்பதைப் புரிந்து கொண்டதும் அன்பை அறிந்து கொள்வேன்.

திருமணம் புரியும் வயதைக் கடந்தும் இன்னமும் மணமுடிக்காமல் தட்டிக் கழித்துக் கொண்டு உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருக் கிறீர்களா? ஏன் இன்னும் காலதாமதம்? உங்களுக்குள்ளிருக்கும் அகங்காரத்தை மூட்டை கட்டித் தூர வையுங்கள். உங்கள் இதயத்தையும் மனதையும் திறந்து உங்களுக்காகக் காத்திருக்கும் வாழ்க்கைத் துணையைத் தேடிப்பாருங்கள். நீங்கள் தேடுவதைப் போலவே உங்கள் தாரமும் உங்களைத் தேடிக்கொண்டிப்பார். உங்கள் தாரத்தின் தகுதிக்கு நீங்கள் போட்டிருக்கும் பட்டியலின் நீளம்தான் உங்கள் தேர்வுக்குக் குறுக்கே நிற்கிறதா? அல்லது நீங்கள் பிடிவாதமாக காண மறுப்பவைகள் தான் உங்கள் கண்களை மறைக்கிறதா?

இன்றுவரை நீங்கள் விரும்பும் சகல தகுதி களையும் உடைய வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொண்டிருப்பீர்கள். இன்று உங்கள் தேடலின் விஸ்தீரணத்தை இன்னும் பெரிதாக்குங்கள். இதுவரை நீங்கள் பார்க்க மறுத்தவைகளையும் உள்ளடக்கிய உங்கள் கைக்கெட்டும் தேர்வுகளின் இதயத்தையும் எண்ணங்களையும சீர்தூக்கிப் பாருங்கள்.

புதிய விடயங்களை இன்றுமுதல் சீர்தூக்கிப் பார்க்க ஆரம்பிக்கப்போகிறேன். என் கண் பார்வைக்குள் அகப்படாமல் தப்பிவிடும் கீழ்க் காண்பவை போன்ற அநேக விடயங்களை அன்பு எனக்கு முன் வைக்கிறது என்பதை உணர்ந்ததும் அன்பை அறிந்து கொள்வேன்.

இன்றுவரை அன்பின் அடிப்படையாயிருந்தும், இலைமறைகாயாகவிருக்கும் சில விஷயங் களை நீ அடையாளம் காணாமல் இருந்திருக் கலாம். நீ உன்னையும் நேசித்து மற்றவர் களையும் நேசிப்பதால் உன் கண்கள் காண் பவற்றுடன், அதற்கப்பாலும் மறைந்திருக்கும், கொடைகள், ஆசீர்வாதங்கள், அழகு அனைத்தையும் அன்புடன் ஏற்றுக்கொள். அன்பின் வெளிப்பரப்புக்குள் புகுந்து அங்கு மறைந்திருக்கும் பொக்கிஷங்கள் அனைத்தை யும் கண்டறியும் முயற்சியை இன்று ஆரம்பி.

Awareness - விழிப்புணர்வு

அன்பு - Love

L - வாழ்க்கை (Life), கற்றுக்கொள்வது (Learning), வெளிச்சம் (Luminosity), பிரகாசம் (Luminosity), நீதி (Law)

O - வாய்ப்பு (Opportunity), ஒருமைப்பாடு (Oneness), திறந்தமனப்பான்மை (Openness)

V - அகண்ட வெளிபோன்ற (Vastness), சகலகலாவல்லமை (Versatility), நற்குணம் (Virtue), வெற்றி (Victory)

E - ஞானம் (Enlightenment), நித்தியத்துவம் (Eternity), சகிப்புத்தன்மை (Endurance), முயற்சி (Endeavor)

உன் மனதைத் திற
உன் கண்களைத் திற



உன் இதயத்தை திற

உன் மனதின், கண்கள் பூரணமாகத் திறந்திருக்காவிட்டால், சிலவேளை நீ உணராமலிக்கும் அன்பு உன்னருகில் பிரசன்னமாயிக்கலாம்.

எனது வாழ்க்கையின் மிக முக்கியமான விடயம் நான் தான் எனும் விழிப்புணர்வை, திறந்த இதயத்துடனும் மகிழ்ச்சி பொங்கும் மனதுடனும் இன்று நான் வரவேற்கிறேன். இடம், நிறை இரண்டையும் கொண்டது ஒரு பொருள் என விளக்குகிறது விஞ்ஞானம். உனது தற்போதைய நிலைக்கும், நீ அடைய விரும்பும் நிலைக்கும் குறுக்கே நிற்கும் அந்த இடைவெளியை நிரப்பக்கூடிய பொருளாக மாறி, நீ விரும்பும் குறிக்கோளையடைய உடன்படுகிறாயா? இது தான் கேள்வி. உன் வெற்றிக்கு உதவக்கூடியவற்றைத் தேர்ந் தெடுத்து இந்த இடைவெளியை நீ நிரப்ப லாம். அல்லது, "ஐயோ! என்ன செய்வது! இதற்குத் தேவையானது இப்போ என்னிடம் இல்லையே! இது சிலவேளை சரிவரா விட்டால், அது நிச்சயம் சரிவராது", என்ற உனது பயத்தினால் ஒன்றுமே செய்யாது இருக்கப்போகிறயா? அல்லது, உன் துணிவைத் திரட்டி எனக்குள் திறமை இருக்கிறது. இதை என்னால் நிச்சயம் செய்ய முடியும். நான் நானாக இருப்பதனால் இதை இப்போ ஆரம்பிக்கிறேன்", என செயற்படப் போகின்றாயா?

உனக்கும் உனது குறிக்கோளிற்கும் இடையில் உள்ள இடத்தை, இறைவனின் முழுமை நிறைத்துள்ளது. ஆனால் இந்த இடைவெளியை நீ எப்படிப் பார்க்கிறாய் என்பது தான் பிரச்சினை. உன் சூழலிலுள்ள மற்றவர்களின் விசயங்களை யும் இந்த இடைவெளியில் வைத்துப் பார்க்கிறாயா? இந்த இடைவெளியில் உனது இடம் என்ன என்பதை உணர்கிறாயா? இந்த இடைவெளிக்குள் ஒளிந்திருக்கும் உனது மகிழ்ச்சியை நீ காண்கிறாயா? இந்த இடத்தில் இறைவனின் அருளை, இறைவனின் இரக்கமிகு தயையை, இறைவனின் பிரகாசமிகு ஒளியை, இறைவனின் பேரன்பைப் பார்க்கிறாயா? சில வேளை இதைச் செய்வது அபாயகரமானதே என யோசிக்கிறாயா? மற்றவர்களால் இப்படி யெல்லாம் செய்ய முடிந்திருக்கிறது. ஆனால் என்னால் இப்போ ஒன்றும் முடியவில்லையே என மாய்கிறாயா? அல்லது ஒருபோதும் செய்ய முடியாது என நீ நினைத்த கனவுகள் யாவும் இறைவன் அருளுடன் நனவாவதைப் பார்க்கிறாயா?

மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-624-9617

**லலிதா புரூடி**




# ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை ஈழத்தமிழ் மகன்

**சோதீஸ்**

இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



Spring Special

416-704-1179

**அலுவலக நேரம்**

Mon., Fri., Sat.: 9:00 am - 6:00 pm
Tues., Wed.: 12 noon - 9:00 pm
4334 Kingston Rd, Scarborough




# MOHAN

## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலைவலி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# இளம் நடிகர்கள் விரைவில் நசுங்கக்காரணம்

இளம் நட்சத்திரங்கள் மின்னலா? வெண்ணிலவா? காலவேகம், அனைத்தையும் சுருக்கிவிட்டது. சோழ சாம்ராஜ்யத்துக்கும் தொண்டை மண்டலத்துக்கும் இடையில் மாதக்கணக்கில் பயணிக்க வேண்டியிருந்தது. இப்போது அதே அவகாசம் பூமிக்கும் செவ்வாய்க்கிரகத்திற்குமாக மாறிவிட்டது. மனிதர்களின் வாழுங்காலம், பிரதமர் பதவிக்காலம் அனைத்துமே சுருங்கி விட்டது. 35ஆண்டுகளுக்கு மேல் கதாநாயகர்களாக இருந்த எம்.ஜி.ஆர் - சிவாஜி காலம், ரஜனி - கமல் காலத்தில் இன்னும் சற்றுக் குறைந்தது இப்போது சொற்ப வருடங்களாக மாறிவிட்டது.



அஜித்குமார் - அப்பாஸ் காலத்தை அது என்னவாக மாற்றப்போகிறது என்று சிந்திக்க வைக்கிறது. அப்படியானால் எம்.ஜி.ஆர், சிவாஜியும் சுமார் 35ஆண்டுகளுக்கு மேல் திரைத்துறையில் அரசாட்சி செய்ததற்குக் காரணம் காலச்சூழல் மட்டும்தானா? மற்றைய துறையைப் போலவும் இதையும் பொதுமைப் படுத்தி விடமுடியுமா? இப்போது படத்துக்குப் படம் கதாநாயகர்கள் மாறிக்கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன. பல காரணங்கள் சொல்லப்படுகின்றன.

முன்பு போல நடிகர்களுக்குள் அர்ப்பணிக்கும் குணம் அற்றுப் போய்விட்டது. இரண்டு படம் வெற்றி பெற்று விட்டால் சம்பளத்தைப் பல இலட்சங்களுக்கு உயர்த்தி விடுகிறார்கள். சிவாஜியும், எம்.ஜி.ஆரும் வாங்காத சம்பளத்தை இன்றைய இளம் நடிகர் தனது 2-வது படத்திலேயே கேட்கிறார். ஆட்டம் அதிகமாகி விடுகிறது. சரியாக ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை. கால்ஷீட் சொதப்பல்கள். நடிகர்கள் வந்த வேகத்தில் காணாமல் போவதற்கு இப்படிப்பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. நடிகர்களின் விட்டேற்றியான போக்குத்தான் அவர்களின் நிலைமைக்குக் காரணம் என்று உறுதியாகக் கூற முடியாது. நல்ல இயக்குனர்களின் அறிமுகம் கிடைக்காமல் எத்தனை திறமை நடிகர்கள் வீணாகியிருக்கின்றனர்.

